# வசந்தம்



# தாய்மொழி மூலம் கல்வி

"சிங்கள ஆசிரியர்கள் ஆயிரம் பேரைக் கிழக்கு மாகாணத்திற்கு அனுப்பி விட்டேன்" என்று மார்தட்டுகிறார் கல்வி மந்திரி இரியகொலே. இதைக் கேட்ட தமிழரசுத் தலைவர், "இராசமாணிக்கம், "விட்டேனு பார்!", என்று வீரமுழக்கம் செய்தார் பத்திரிகைகளில். நடந்தது என்ன? பிரதமருடன் தமிழரசுத் தலைவர்கள் நடாத்திய பேச்சுவார்த்தையில் சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப் பகுதிக்கு அனுப்புவதை தமிழரசுக்கட்சி ஏற்றுக் கொண்டது. என்று இலங்கை வானொலி நைஸாக அறிவித்தது.

சிங்கள ஆசிரியர்கள் தமிழ்ப்பகுதிக்கு எதற்காக அனுப்பப்படுகிறார்கள்? ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்தாறுக்கு முன் இருந்தது போல் தமிழ் மாணவர்கள் சகோதர மொழியான சிங்களத்தை ஒரு பாடமாகப் படிப்பதற்கா? அப்படியானால் அதை அனைவரும் ஏற்றுக்கொள்ளலாம். அதுவும் சிங்களம் நாட்டின் அரசகரும மொழி என்பதை நமது நாடாளுமன்றப் பிரதிநிதிகள் அத்தனை பேரும் ஏற்றுக் கொண்டபின் அது அவசியமானது கூட. அதை எதிர்ப்பது தற்கொலைக் கொப்பான விஷயம்.



வசந்தம் மலர்: 2 இதழ்: 2 ஒக்டோபர் 1966

ஆனுல் கல்விமந்திரியும் அவரது அரசாங்கமும் அவர்களது சகாக்களான நமது நடாளுமன்ற உறுப்பினர்களும் சிங்கள ஆசிரியர்கள் பிரச்சனையில் இத்தனை ஈடுபாடுகாட்டுவதேன்? அது தான் போதனுமொழி சம்பந்தப்பட்ட பிரச்சனையாகும்.

உலக நாடுகள் பலவற்றினதும்-கல்விமான்களினதும் ஏகோபித்த முடிவு—கல்வி சம்பந்தப்பட்ட ஜனநாயகக் கோட்பாடு—தாய்மொழி மூலம் கல்வி என்பதே. ஆகையால் தமிழ் பேசும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும்— ஒருவர் தவிர ஏகோபித்து ஆதரிக்கும் தேசிய அரசாங்கம் பெற்றோர் விரும்பிய மொழியில் கல்வி என்ற புதிய நடைமுறையைப் பின்பற்றுகிறது. இதற்காகத்தான் சிங்கள ஆசிரியர்கள் ஆயிரம் பேரை கிழக்கிலங்கைக்குக் கல்வி மந்திரி அனுப்பியுள்ளார். இதைத் தமிழரசுக் கட்சி ஏற்றுக் கொண்டு விட்டதா? மற்றும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கீகரித்து விட்டனரா? என்று மக்கள் மத்தியில் கேள்வி எழுந்துள்ளது.

தமிழ் பேசும் மக்கள் பற்றி இதுவரையும் மேடைகளில் முழக்கி வந்தவர்களும் எவ்வாறு தமிழ்பேசும் மக்களில் ஒரு பகுதியினரான கிழக்கிலங்கை முஸ்லீம் மக்களை சிங்களம் பேசும் மக்களாக ஏற்றுக் கொண்டார்கள்? தமிழரசுத் தலைவர் செல்வநாயகம் அவர்கள் "முஸ்லீம் மக்களின் விடயத்தில் தலையிட நாம் யார்?" என்று கூறுவதன் மூலம் அவர்களை தமிழ் பேசும் மக்கள் இல்லை என ஒத்துக்கொண்டாரா? அவர் இதுவரை பேசிவந்தது எல்லாம் வெற்றுரை தானு? இவை மக்கள் மத்தியில் எதிரொலி கிளப்பும் கேள்விகளாகும்.

தமிழரசுத் தலைவர் செல்வநாயகம் அவர்களுக்கோ அவரது கட்சியினருக்கோ மற்றும் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கோ இது அவசியமற்றதாக இருக்கலாம், அல்லது இதை எதிர்துக் கேட்பது அமிர்தலிங்கம் சொல்வது போல் அவர்களது வர்க்க நலன் பேணும் அரசாங்கத்திலிருந்து தமிழரசுக்கட்சியை பிரிக்கும் சூழ்ச்சியாகவோ இருக்கலாம். ஆனுல் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தளவில் இது அவர்களின் ஜீவாதாரப் பிரச்சனை கல்வி சம்பந்தமான ஜனநாயகப் பிரச்சனையாகும். இன்னும் பார்க்கப் போனுல் தமிழ்பேசும் மக்

**கடமையின் எல்லை** 'கடமையின் எல்லை' படத்தின் விமர்சனம் அடுத்த இதழில் வெளிவரும்.

களைப் படிப்படியாக சிங்களம் பேசும் மக்களாக மாற்றும் இன அழிவுப்பிரச்சனையுமாகும்.

எனவே இன்று நாட்டில் நடக்கும் நடவடிக்கைகளைப் பார்த்தால் 'எல்லாம் தமிழியக்கம்' நடத்தியவர்கள் காலப்போக்கில் எல்லாம் 'சிங்கள மயம்' என்ற நிலைக்கு மாறிவிடுவார்கள் போல் தெரிகிறது. அதே நேரத்தில் டாக்டர் மலலசேகரா உட்பட அரசியற் பிரமுகர்கள் சிலரும் பத்திரிகைகளும் ஆங்கிலத்தின் அவசியத்தைப் பற்றி பேசியும், எழுதியும் வருகிறார்கள். இவையெல்லாம் தாய்மொழிமூலம் கல்வியென்ற ஜனநாயகக் கோட்பாட்டிற்கு விடப்படும் சவாலாகவும் அமைந்துள்ளன.

தேசிய அரசாங்கத்தினதும் சகல பிற்போக்கு வாதிகளினதும் இந்த ஜனநாக விரோதச் செயலை எதிர்த்து நிற்கவேண்டியது ஜனநாயகக் கல்வியைப் பேண விரும்பும் சலக மக்களினதும் தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மக்கள் அனைவரினதும் தவிர்க்க முடியாத கடமையாகும். கிழக்கிலங்கை முஸ்லீம் மக்களின் தாய்மொழி தமிழே என்று கடந்த காலத்தில் சாதித்து வந்தவர்கள் திரும்பவும் அதை நினைவு கூருவது அவசியம். அந்த ஜனநாயகக் குரல் திரும்பவும் எழும்ப வேண்டும். தாய் மொழிமூலம் கல்வி என்பது மக்களின் ஜீவாவாதாரப் பிரச்சனை மட்டுமல்ல நாட்டின் ஜனநாயகப் பிரச்சனையுமாகும்.

பெற்றோர் விரும்பிய மொழியில் கல்வியென்பது—பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் விரும்பியபடி கல்வியென்பது ஆங்கிலத்திற்கு அந்தஸ்து தேடும்—சிங்களத்தைத் திணிக்க விரும்பும் இரட்டை மாய்மாலத் தந்திரமாகும்.

**இறப்பதற்கு முன்பு**

நான் இறப்பதற்கு முன்பு ஒரு முறையேனும் சத்தியத்துடன் அணி வகுத்துச் செல்ல வேண்டும்.

— மார்க்ஸிம் கோர்க்கி

## கொழும்பில் 'வசந்தம்'

# விமர்சன அரங்கம்

'வசந்தம்' முற்போக்கு கலை-இலக்கிய கர்த்தாக்களின் குரலாகவும், அவர்களின் படைப்புகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லும் சாதானமாகவும் திகழ்கிறது. 'வசந்தத்'தில் பல குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் ஈழத்தின் முற்போக்குக் கலையையும், இலக்கியத்தையும் சரியான பாதையில் கொண்டு செல்லும் தகுதியும், கடமையும் அதற்கே உண்டு. வசந்தம் இப்போது பல சிரமங்களுக்கிடையேயும், பொருளாதார நெருக்கடிகளுக்குள்ளேயும் தொடர்ந்து வெளி வருவதும், பிற்போக்குக் கலை இலக்கியத்தினது பத்திரிகைகளின் கடும் போட்டிக்கு மத்தியில் ஈடு கொடுத்து நின்று வருவதும் ஒரு சாதனையாகும்.

ஒக்டோபர் 13-ந் திகதி கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் நடைபெற்ற 'வசந்தம்' விமர்சனக் கூட்டத்தில் பங்கு பற்றிப் பேசிய அனைவரும் மேற்கண்டவாறு தமது கருத்துக்களை ஏகோபித்த முறையில் தெரிவித்தனர்.

ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகளைப் பொறுத்தவரை 'வசந்தம்' ஒன்றுதான் பகிரங்கமான பத்திரிகை விமர்சனத்தைத் தொடங்கி வைத்துள்ளது. முதலில் யாழ்ப்பாணத்திலும் இரண்டாவது கண்டியிலும், மூன்றாவது கொழும்பிலும் நடைபெற்றுள்ள 'வசந்தம்' பற்றிய பகிரங்க விமர்சனக் கூட்டங்கள், பத்திரிகைத் துறையில் புதுமையானது மாத்திரமல்ல. வாசகர்களின் விழிப்புணர்ச்சியை வளர்க்கவும் ஒரு தூண்டுகோலாகவும் அமைந்துள்ளன. எழுத்தாளர்கள், இலக்கிய அன்பர்கள் வாசகர்கள் ஆகியோரால் தன்னைத் தானே விமர்சித்துக் கொள்ளும் தைரியம், அந்த வழியைத் திறந்துவிட்ட பெருமை வசந்தத்திற்கே உரியது. இனி வரக்கூடிய முற்போக்குக் கலை-இலக்கிய சஞ்சிகைகளுக்கும், பத்திரிகைகளுக்கும் இது வழிகாட்டுதலாக அமைந்துவிட்டதோடு, கலை இலக்கியத்தை வியாபாரச் சரக்காக்கி வாசகர்களைச் சுரண்டிக் கொள்ளை லாபம் திரட்டும் பத்திரிகைக் குப்பைகளுக்கும் இது ஓர் எச்சரிக்கையாகவும் அமைந்திருக்கிறது.

திரு. செ. கணேசலிங்கனின் தலைமையில் நடைபெற்ற இந்த விமர்சனக் கூட்டத்தில் எழுத்தாளர்கள், இலக்கிய அபிமானிகள், 'வசந்தம்' வாசகர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். திரு. இளங்கீரன் ஆரம்ப உரை நிகழ்த்தினார். அவர் தனது பேச்சில் 'வசந்தத்'தின் வரலாற்றையும், அதன் நோக்கத்தையும் சுருக்கமாக எடுத்துரைத்தார். திருவாளர்கள் அ. ந. கந்தசாமி, சில்லையூர் செல்வராசன், சோதிவேல், சிவகுரு

நாதன், அ இராமநாதன், சத்தியசீலன் மற்றும் சிலரும் விமர்சனத்தில் கலந்துகொண்டு பேசினர்.

திரு. செ. கணேசலிங்கத்தின் தலைமையுரை இன்றையப் பத்திரிகை உலகத்தைப் பற்றிய ஓர் ஆய்வுரையாக அமைந்திருந்தது. இன்றையப் பத்திரிகைகளின் ஒரே ஒரு நோக்கம் வியாபாரமே என்பதையும், முதலாளித்துவ உலகில் முதலாளித்துவப் பத்திரிகைகள் வியாபார நோக்குடையவையாக இருப்பது வியப்புக்குரியதல்ல. அது அவற்றின் வர்க்க குணும்சம் என்பதையும், எனவே கலை-இலக்கியத்தைப் பற்றி அவற்றிற்குரிய நோக்கங்களும் இலட்சியங்களும் இருக்க வேண்டும் என்று எதிர் பார்ப்பது தவறு என்றும் சுட்டிக் காட்டினர். எனவே கலை இலக்கியத்தைச் சமுதாய மாற்றத்திற்காகவும் அதன் புதிய மலர்ச்சிக்காகவும் உபயோகிக்க வேண்டும் என்ற உன்னத இலட்சியத்தைக் கொண்டுள்ள முற்போக்காளர்கள் அனைவரும் முற்போக்கு கலை-இலக்கியம் வளரவேண்டும் என்று துடிக்கும் அனைவரும் தமது சஞ்சிகையான 'வ ச ந் த ம்' தொடர்ந்து வரவும் வளரவும் ஒத்துழைப்புத்தரவேண்டும் எனக் கூறினர்.

திரு. அ. ந. கந்தசாமி தனது விமர்சனத்தில் ஈழத்துக் கலை-இலக்கியத் துறையில் 'வசந்தத்'தின் ஸ்தானத்தைக் குறிப்பிட்டுவிட்டு இன்றைய கலை - இலக்கியப் பிரச்சினைகள் பற்றியும், படைப்பாளர்களை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள் பற்றியும் தனது கருத்துக்களை எடுத்துக் கூறினர். குறிப்பாக எழுத்து நடையில் கவனம் செலுத்தல் வேண்டுமென்றும், மக்களுக்கு விளங்கும் நடையில் - சகல பகுதிகளிலுமுள்ள தமிழ் வாசகர்கள் அனைவரும் விளங்கத்தக்க இலகுவான ஆனல் பொதுவான நடையைக் கையாள வேண்டும் என்பது தமது கருத்தென்றும் கூறிய அவர் மக்களுக்குப் புரியாத நடையில் எழுதுவது மக்கள் விரோத நடை என்பதையும் வலியுறுத்தினர்.

திரு. கா. சிவத்தம்பி எழுதியனுப்பிய த ன து விமர்சன உரையில் 'வசந்தத்'தின் தோற்றம் பற்றியும், அதன் வளர்ச்சி பற்றியும் விவரித்திருந்தார். ஈழத்துக் கலை இலக்கியத் துறையில் முற்போக்கு எழுத்தாளர் இயக்கம் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்றுத் தேவையாக இருந்தது, இருப்பது போலவே, ஈழத்து முற்போக்குக் கலை - இலக்கிய வரலாற்றில் 'வசந்தம்' தவிர்க்க முடியாத ஒரு தேவை என்றும் சுட்டிக்காட்டியிருந்தார்.

அ. இராமநாதன் தனது விமர்சன உரையில், 'வசந்தம்' முற்போக்கு கலை – இலக்கியக் கர்த்தாக்களின் பேராயுதமாக இருக்க வேண்டும் எனவும், முற்போக்கு கலை - இலக்கியத்தில் பாட்டாளி வர்க்கப் பார்வை இருக்க வேண்டும் எனவும் கூறினர். மேலும் பலர் பேசினர்.

○ சிறுகதை

# அப்பன் சாமி

— கே. டானியல்

இப்படியும் ஒரு அதிசயமா?

இது நடக்கக்கூடியதுதானு?

சந்திரசேகரன் இப்படி ஏங்கிப்போய் - மொட்டை மரமாக நிற்கிருனே!

அவன் முகத்தில் மரணக்களை படிந்துவிட்டதே!

அவன் உடல் வெட வெடக்கிறதே!

அவனின் தோற்றம் இத்தனை பரிதாபத்துக்குரியதுதானு?

நான் பார்க்கிறேன்; என் கண்களை நான் நம்பித்தான் ஆகவேண்டும்.

பட்டணத்திற்கு நடுவே,

இத்தனை சனங்களுக்கு மத்தியில்,

இவள், இந்தப் பிச்சைக்காரி, புழுதிமயமான குழந்தையை அல்லாக்காகத் தூக்கி கக்கத்துக்குள் வைத்துக் கொண்டு கேளாத கேள்விகளைக் கேட்கிருளே!

எனது காதுகள் இவைகளைக் கேட்கின்றன,

இவளுக்கு மது போதை! இவள் ஆட்டம் போடுகிருள்.

இவளிடமிருந்து வரும் கள்ளின் நெடிலை என் நாசிகள் சுவாசிக்கின்றன.

இவள் கூந்தலை அநாயாசமாக அள்ளிச் செருகி இருக்கிருள். அது பஞ்சு போல, புழுதி படிந்த மினுமினுப்புடன் கெம்பிநிற்கிறது.

இவள் கண்கள் செம்மிச் செம்மி மீழ்கின்றன.

அழுக்கான கறுத்தச் சேலையொன்றை உடம்பில் அங்கு மிங்குமாகச் சொருகி அடைந்து வைத்திருக்கிருள். அதன் ஓட்டை ஒடிசல்களை மறைத்துவிட அவள் நினைத்ததாக இல்லை,

பிசாண் பிடித்த ஒரு ரவிக்கையைப் போட்டு, மார்பகங்களை உயரத் தூக்கி, இலாவமாக முடிச்சுப் போட்டுக்கொண்டிருக்கிருள்.

அந்த மார்பகங்களை மேல்பக்கவாட்டில் துழாவி, அந்தக் குழந்தை அவஸ்த்தைப்படுத்துகிறது.

இவள் உடல் கொடிபோல இருக்கிறது.

முகம் வட்டமாக இருக்கிறது. இது சிறிதாக இருப்பினும் கன்ன எலும்புகள் உண்டோ இல்லையோ என்று தொட்டு வருடிப் பார்க்கத் தோன்றும் அளவுக்கு அது செளிப்பாக-பொங்கிப் பூரித்துப்போய் இருக்கிறது.

இவள் நிறம் இயற்கையில் சிவப்பாகத்தான் இருக்க வேண்டும். ஆனுல் இப்போதைய வெயிலும், பஞ்சமும் அந்தச் சிவப்பைச் சுட்டுவிட்டிருக்கிறது.

"சோமாறிப் பயலே ஏண்டா குழந்தையை அடிச்சே?"

"பொறுக்கி மவனே இன்னொருக்காத் தொட்டிற்ரு பாப்பம்?"

இவள் இதை மட்டுந்தான் கேட்டாள்.

இந்தப் பைத்தியக்காரன் குழந்தையை மறுபடியும் அடித்துவிட்டானே!

இப்போது அவள் பேசுருளே பேச்சு; கேட்கிருளே கேள்விகள்! கேள்விகள் மட்டுந்தானு? அவனுக்கென்று மேலும் சவால்!

இந்தச் சவாலைச் சந்திரசேகரன் ஏற்றுத்தான் ஆகவேண்டும்!

இதைத்தான் ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிருர்களா?

சந்திரசேகரன் மொட்டை மரமாகி விட்டானே!

* * *

சந்திரசேகரன் என்ன சின்னப்பயலா? அல்லது வயது முதிர்ந்துவிட்ட கிழமா? வயது முப்பதாகிறது. போதாக் குறைக்குச் சிவந்த கண்களும்; துள்ளு மீசையும்!

சிவந்த கண்களால் ஏறிட்டுப் பார்த்தும், துள்ளு மீசையைத் தடவி விட்டுக் கொண்டால் யாருக்குத்தான் மனசு திக்கென்றிருக்காது.

இந்த முப்பது வயதுக் கிடையில் நடந்துபோனவைகளைக் கணக்கெடுத்துக் கொண்டால் அது ஒரு பெரிய வரலாருகி விடும். அதுவும் ஒரு தனித்துவம் கொண்டதாகவும் அமைந்து விடும்.

ஊரின் பெரியமனிதர் பெரியதம்பிப்பிள்ளைக்கு இவன் மகன்- ஒரே மகன்.

பெரியதம்பிப்பிள்ளையின் சொத்துக்கெல்லாம் இவன் ஏகச் சக்கரவர்த்தி. பேருக்கென்று ஒரு அக்காள். அவள்தான் 'சீதனம்' என்ற பெயரால் தன் பங்கைப் பெற்றுக்கொண்டு போய்விட்டாளே!

"பெரியதம்பியாரின் சொத்தையெல்லாம் கரைக்கத்தான் பொடியன் வந்திருக்கிருன்" என்று இவன் சின்ன வயசாய் இருக்கிறபோது ஊர்ஜனங்கள் போட்ட கணக்குத் தப்புக் கணக்காகிவிடவில்லை.

கீழ்க்காணும் சம்பவத்துடன் அவனின் வரலாறு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

வயசு பதினுறில்!

மனது பதினுறுக்கு மிஞ்சிவிட்ட வளர்ச்சி கண்டிருந்த போது! ........

'அன்னம்' என்ற வேலைக்காரப் பெண் ஒருத்தி வீட்டோடு இருந்தாள்.

சந்திரசேகரனுக்கு வயசு எட்டாக இருக்கும்போது அந்த வீட்டுக்கு குமரியாக வந்து சேர்ந்தவள் அவள்.

பெரியதம்பிப்பிள்ளைக்கு அவள் தூரத்து உறவு முறை. கிராமத்திலிருந்த அவளின் தாய் தந்தை ஒரு விபத்தில் இறந்து போக, பெரியதம்பிப்பிள்ளை பெரிய மனது பண்ணி அவளைத் தன் வீட்டோடு அழைத்து வந்து விட்டார்.

பார்ப்பதற்கு அவள் நோஞ்சி, அத்தோடு பொழுதாகிவிட்டால் அவள் கண்களும் இருண்டு போய்விடும். மாலைக்கண் என்பார்களே அது! அவளை ஒருவன் கையில் பிடித்துக் கொடுத்துவிட முடிந்ததோ இல்லையோ, அவள் இந்த வீட்டோடேயே நிலைத்துவிட்டாள். இதனுல் பெரியதம்பிப்பிள்ளையின் பாரியாருக்கு மனச்சரிவு. "பாவம் குருடி, இவளைப் பராமரிப்ப

தால் புண்ணியம் வரும்'' என்று சொல்லிச் சொல்லி அவர் பாரியாரைச் சமாதானப்படுத்தி விடுவார்.

சந்திரசேகரனைவிட அவள் பன்னிரண்டு வயது மூத்தவள்.

ஒருநாள் இரவு அவள் படுக்கைக்கு யாரோ வந்து.........

அன்னம் கத்தி ஊரையே வரவழைத்து விட்டாள்.

வந்தவன் யாரென்று அவளால் காண முடியவில்லை. ஆனால் அந்த ஆசாமியின் கையைக் கடித்துச் சதையைப் பிடுங்கிவிட்டாள்.

இந்தச் சம்பவத்திற்குப் பின் ஒரு மாதகாலம் சந்திரசேகரன் வீட்டிலில்லை.

சந்திரசேகரன் கதைத் தொடக்கத்தில் அன்னத்தின் கதை முடிந்துபோய்விட்டது.

வீட்டெஜமானி அவளை நடத்தை கெட்டவளாக்கி அவளை வீட்டைவிட்டே அனுப்பி வைத்து விட்டாள். ''கரும்பு கட்டோடை இருந்தா எறும்பு ஏன் ஏறப்போகுது'' என்று பழமொழியும் சொன்னாள்.

* * *

''முதலாம் கட்டத்திலிருந்து இரண்டாம் அத்தியாயத்திற்கு சந்திரசேகரனின் வரலாறு வளர்கிறது.'' என்று கட்டியங் கூறிக்கொள்ளாமலே காலம் நகர்ந்தபோது .........

சந்திரசேகரனின் ஆங்கிலக் கல்வி நின்றுவிட்ட கதை மிகவும் வீரப்பிரதாபமாகிறது.

'ரோசலின்' என்பவள் கதாநாயகி என்ற ஸ்தானத்திற்கு பலாத்காரமாக இழுத்து வரப்பட்டாள்.

பார்ப்பதற்கு இவள் மிகவும் அழகி.

கிறிஸ்தவப் பெண்.

திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் இவள் ஒன்பதாவது படித்துக்கொண்டிருந்தாள்,

ஏழை,

படிப்பில் மிகவும் சுட்டி.

ஐங்கியை முன்நோக்கி நீட்டி குழப்பிவிட்டு, ரோசலினுக்கு முன்னால் நின்று இவன் பல்லிழிப்பதைப் பார்த்தால் மிகவும் அருவருப்பாக இருக்கும்.

அவன் முன்னே தோன்றும் போதெல்லாம் ரோசலின் செபமாலையைக் கையிலெடுத்து ஜெபம் ஓதத் தொடங்கிவிடுவாள்.

இவள் மிகவும் விசுவாசமான கத்தோலிக்கப் பெண். சந்திரசேகரன் முன்னே தோன்றி இழிப்பதெல்லாம் தனக்காகத்தான் என்பதை உணரத் தெரியாதவளல்ல. சாத்தான் ஒன்று தன்னைச் சுற்றிச் சுழன்று வருவதாக அவளுக்கு நினைப்பு. இதனால்தான் இவன் முன்னே தோன்றும்போது இவள் ஜெபிக்கத் தொடங்கிவிடுவாள்.

"பார்ப்பதற்கே அழகான பெண்களெல்லாம், ஆண்களின் மெத்தென்ற சுகத்துக்காக ஏங்கித் தவிப்பவர்கள்தான்" என்ற அவனின் தத்துவம் பொய்த்து வருவதைக் கண்டு அவன் ஆத்திரப்பட்டான். எதிர்பார்த்தது நடக்காவிட்டால் கிடைக்கும் ஏமாற்றத்தோடு, எதிர்பார்த்ததற்கு ஆயிரம் மடங்கு மாறுபாடாக வேறொன்று சேர்ந்துவிட்டால் மனசால் பொறுத்துக் கொள்ளத்தான் முடிகிறதா?

ரோசலின் ஒருநாள் அவனை, "சீ சாத்தான்!" என்று காறி உமிழ்ந்தாள். போதுமே அவனுக்கு! மறுநாள் காலை மடத்திற்குச் சமீபமாக உள்ள சந்து முனையில் அவளுக்காகக் காத்திருந்து அவளை அல்லாக்காகத் தூக்கிக் காரில் போட்டுக் கொண்டு போய்விட்டானே சந்திரசேகரன்!

ஒரு வாரத்திற்குப் பின் ரோசலின் உறவினர்கள் பட்டணத்திற்கு வெகு தொலைவிலுள்ள ஒரு குக் கிராமத்திற்கு, பொலிசாரின் உதவியுடன் சென்று ரோசலினை மீட்டனர். உறவினர்களைக் கண்டதும் அவள் 'கோ' வென்று கதறிவிட்டாள்.

நீதிமன்றத்திலே, ரோசலின் கேட்காத கேள்வியெல்லாம் கேட்கப்பட்டாள். சந்திரசேகரனுக்காக நியமிக்கப்பட்ட 'அப்புக்காத்து' சிற்றம்பலம் கண்களை உருட்டி; பக்கவாட்டில் சிமிட்டி, கைகளை வீசி; துழாவி, விரல்களைத் தனியாக மடக்கி; அசைய வைத்து, கேட்கக்கூடாதவைகளையெல்லாம் கேட்டு வைத்து விட்டாரே! வயது அறுபதுக்கு மேலாகிவிட்டாலும், இப்படிக் கேள்விகளைக் கேட்பதில்தான் அவருக்குப் பேரின்பம்

கிடைத்தது இதுமட்டும் போதாதென்று, கோட்டாருக்கு மட்டுமான இரகசிய விசாரணையும் இருமணி நேரமாக வைத்தார்கள். இந்த இரு மணி நேரமும் ரோசலின் நெருப்பின்மேல் நடந்தாள். குமட்டும் அந்த ஒருவார அனுபவங்களை அவள் சொல்லித்தான் ஆகவேண்டியிருந்தது!

சந்திரசேகரன் அவளைத் தொட்டிழுத்துச் சென்றதிலிருந்த ஒவ்வொரு நிமிடத்துக்குமான கசப்பான - அசிங்கமானவைகளை தனித்தனியே பிய்த்துப் பிய்த்துக் கேட்டனர். ஆனால் முடிவு என்ன ஆயிற்று? எதிரிக் கூட்டில் நின்ற சந்திரசேகரனை, ''நீ, சுற்றவாளி, போகலாம்'' என்று மட்டும் மொட்டையான வார்த்தை ஒன்றுதான்!

சந்திரசேகரன் மகராஜனாகிவிட்டான். தேவையானவற்றை வாசகர்களுக்குக் கொடுக்க வக்கற்ற பத்திரிகைகள் சந்திரசேகரனின் படத்தையும், போட்டு அவனை விளம்பரப்படுத்தி விட்டபோது இவன் மகராஜனாகவராமல் வேறெப்படி வர முடியும் ?

ஊரெல்லாம் சந்திரசேகரனைப்பற்றியே பேசியது. தொடர்ச்சியாக அவன் ஊரையெல்லாம் பேசும்படி செய்து கொண்டே வந்தான்.

தன் கண்களிலே படும் பெண்களெல்லாம் அதிஷ்டசாலிகள் என்பது அவன் நினைப்பு

தன்னால் எச்சில் படுத்தப்படவேண்டிய பண்டங்களைத் தடுத்துவைத்தோ, அல்லது அது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டோ விடுபவர்களை அவன் மன்னிப்பதில்லை. தானாகவும், தனது பரிவாரங்களுக் கூடாகவும் அவன் பழிதீர்த்துக் கொள்கிறான்.

* * *

உலகத்திலே பல அதிசயங்கள் நடந்து விடுகின்றன. அவைகளில் குறிப்பிடக் கூடிய சிலதான் 'உலக அதிசயங்கள்' என்ற இடாப்பில் சேர்க்கப்பட்டு விடுகின்றன. இப்படிச் சேர்க்கப்படும் அதிசயங்களுக்கு எந்த வரைவிலக்கணமென்பது யாருக்கும் தெரிவதில்லை. சில அதிசயங்கள் அந்த அதிசயம் நடக்கும் கிராமத்தோடு, அல்லது பகுதியோடு அடங்கிப்போய் விடுகின்றன. இவைகளை உலக அதிசய நிர

லில் யார் சேர்த்துக் கொண்டாலென்ன, விட்டாலென்ன நமது யாழ்ப்பாணக் குடாநாட்டின், பட்டணத்துக்கு நடுவே ஒரு அதிசயம் இருக்கவே இருக்கிறது. "நடமாடும் பஸ்நிலையம்" என்று பெருமையாகவும், அழகாகவுந்தான் சொல்வோமே.

மூன்றுண்டுக் கொரு தடவையும், சில வேளைகளில் வருடத்தில் இருதடவையும் இந்த பஸ்நிலையம் நகர்ந்து நகர்ந்து நடமாடுகிறது.

மாநகர சபைத் தேர்தல் முடிந்து தலைவர் தெரிவு நடந்த மறு மாதம் இதுஇடம் பெயரும், முறைப்படி மூன்றுண்டுகளையும் ஒழுங்காகத்தான் முத்டிது விட்டால் மூன்றுண்டுகளுக்குப் பிந்தியதேர்தலில் வரும் தலைவர் வேற்றுளாக இருந்தால் நிட்சயமாக இது நகரவே நகரும். சில சந்தர்ப்பங்களில் தலைவர் ஸ்தானம் இரண்டொரு மாதத்துடன் காலாவதியாவதுமுண்டு, அப்படி காலாவதியாகின் பஸ் நிலையம் நிட்சயமாக நகர்ந்தே ஆகும்.

உங்களில் யாராவது, எப்போதாவது பட்டணத்திற்குவந்தால் இது நகர்ந்து நகர்ந்து, நிலைத்து மீண்ட பகுதிகளைப் பார்ப்பீர்கள். ஒவ்வொரு காட்சியின் போதும் இந்த பஸ்நிலையம் நினைவுச் சின்னங்களை விட்டுவிட்டே போகும். குறிப்பாக மின்சார நிலையத்திற்கு மேற்குப் புறமாகப் பாருங்கள் ஒரு கம்பி வேலி அடைப்புத் தெரியும், பழம் பெருமைக்குரிய சின்னங்களைப் பாதுகாப்பது போல் இந்த இடத்தையும் மரபுக்கு மதிப்புக் கொடுத்து, காப்பாற்றும் நம்மவன் இதையும் பாதுகாத்து வைத்திருக்கிருன்.

இந்த நினைவுச் சின்ன அடைப்புக்கு நேராக தெற்காக நின்று மேலும் தெற்கு நோக்கிப் பார்வையை வீசுங்கள் சேறும் சகதியும் தேங்கிக்கிடக்கும் தண்ணீர்த் தேக்க வாய்க்காலையும், அதைமருவியபடி சிறு ஒழுங்கையையும் காண்பீர்கள்.

துர்க்கந்தந்திற்குத் துணிச்சலுடன் முகம் கொடுத்துக் கொண்டு, அந்தச் சிறு ஒழுங்கையால் நகர்வீர்களானுல் அடுக்கடுக்காக நான்கு கள்ளுக் கடைகளையும், அக்கடைகளில் ஏதாவதொன்றில், இடுப்பிலே இலாவகமாக விடப்பட்டிருக்கும் ஏணைக்குள் குழந்தை ஒன்றை வைத்துக் கொண்டிருக்கும் ஒருத்தியை நிட்சயமாகச் சந்திப்பீர்கள்.

* * *

அவளுக்குப் பெயர் மூக்காயி.

மாலேவேளே யென்ருல் போதையால் அவள் கண்கள்கிறங்கிப் போய்விடும்.

பகலெல்லாம் அவள் பிச்சை எடுக்கிருள்.

அவள் கை நீட்டிப் பிச்சை கேட்கும் போது பலர் தாராளமாகவும் கொடுத்து விடுவார்கள். பேய் ஆசை! அவள் நெஞ்சத்தை அள்ள கொடுக்கத்தான் முயல்வார்கள்.

''சீ, பிச்சை வாங்கிக் குடிச்சிட்டு ரோட்டிலே கிடக்கிறியே!'' என்று யாரும் கேட்டுவிட்டால் அவளுக்கு மூக்கின் மேலாகக் கோபம் பொங்கிக் கொப்ளிக்கும்.

"ஏஞ்சாமி, நீ தருமம் பண்றது என்னே அடிமையாக் கிடவா? உங்காசு எனக்கு வேண்டாஞ்சாமி, வைச்சுக் கும்பிடுசாமி?" என்று பட்டென்று பேசிவிட்டு வீருப்பாக நடந்து விடுவாள்.

நகர சபையின் வேலேயாள் கறுப்பன் அவள் கையைப் பிடித்துக் கொண்டிருந்தான். இப்போது அவனும் செத்துப் போய் விட்டான்.

இதற்குப்பின்......?

அவள் சுதந்தரமானவள்!

இந்தச் சுதந்தரத்தால்தான் அவள் குழந்தை ஒன்றை ஈன்று வைத்திருக்கிருள்.

இந்தக் குழந்தையின் அப்பனுன அயோக்கியனே அவளால் அடையாளம் காட்டவே முடியாது.

இருட்டோடு ஒரு நாள்,

இந்த ஒழுங்கையின் சிறுகுச்சுக்குள், ஒருத்தன் இவள் கையைப் பிடித்து இழுத்தான். மூக்காயிவிடவில்லே.

அந்த முரடனின் மணிக்கட்டைக் நறுக்கெனக் கடித்துப் பிடுங்கிவிட்டாளே!

புறங்காட்டி ஓடிவிட்ட அந்த அயோக்கியப் பயல்தான் இந்தக் குழந்தையின் அப்பனே?

அந்த இரவு,

நடு இராத்திரி,

நகரசபை வெளிச்சங்கள்யாவும் சொல்லிவைத்தாற் போல மின்சார யந்திரக் கோளாறினுல் அணைந்து போக,

மூக்காயி எடுத்துச் செல்லப்பட்டாளே !

சாராயக் கடைக்குப் பக்கத்தேயுள்ள பொட்டுக் குடிசைக்குள் மூக்காயி நித்திரை போனபோது, நான்கைந்து உருவங்கள், அவள் வாயை அடைத்து அப்படியே அல்லாக்காகத் தூக்கிச் சென்று விட்டார்கள்.

எங்கோ ஒரு இடத்தை நோக்கி கார் ஒன்றுடன் நகர்ந்த தாக மட்டும் ஞாபகம் !

நகரசபையின் கிழக்கெல்லைக் கடற்கரையோடு 'துண்டி' என்ஞெரு சுடுகாடு.

அந்தச் சுடுகாட்டுக்கு நடுவே ஒரு மடம்.

விடியும் வேளை அந்த மடத்துக்குள் மூக்காயி மயக்க நிலை யில் கிடந்தாள்.

சாராய நெடில் வீசியது.

மடத்துக்குள் நான்கைந்து வெற்றுச் சாராயப் புட்டிகள் கிடந்தன.

மூக்காயி நன்கு குடித்திருக்கவேண்டும் ; அல்லது பலாத் காரமாக குடிக்கவைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அந்த இரவின் நிகழ்ச்சிகள் அடிமனதோடு ஒட்டிக் கொண்டு நின்று அடிக்கடி தோன்றும். அசிங்கமான அந்த நினைவுகளை மறந்துவிட அவள் குடித்தாள்.

மனதின் கனதி இதனுல் குறைந்துதான் தோன்றும். அத ஞல் மேலும் மேலும் அவள் குடிக்கிருள்.

இருட்டோடு இருட்டாகத் தெரிந்த அந்த நான்கு உருவங் களையும் அடையாளங் கண்டுவிட ஆயிரந் தடவைகள் அவள் முயன்று முயன்று பார்த்துவிட்டாள்.

முதலில் பரிவோடும், பின்பு கடுமையோடும் சாராயப் புட்டி யைத் தன் தொண்டைக்குள் வைத்து ஊற்றிஞனே அந்த ஆத்மா, அதற்காக அவள் இப்போது அனுதாபப்பட்டாள்.

அசிங்க நினைவுகளின் சாயல் அடங்கிப்போக, அந்த அசிங் கங்களின் கூட்டு நிழல் ஒன்று கருபாசத்துடன் ஒட்டி நின்று வளர்ந்து கடைசியில் ......

ஒருநாள் மூக்காயி பிரசவித்தாள்!

இந்தப் பிரசவத்திற்காக அவள் ஏங்கிச் சாகவில்லை' மனதை அலட்டிக் கொள்ளவில்லை.

* * *

"பொறுக்கி மவனே, இன்னொருக்காத் தொட்டிற்று பாப்பம்"

இவள் விட்ட சவாலுச்கு இவன் மட்டும் பேசாமல் இருந்திருக்கக்கூடாது. கைநீட்டி மறுபடியும் அந்தக் குழந்தையை அடித்து விட்டானே!

மூக்காயி பதிலுக்கு இவனை அடித்தாளா?

பட்டப் பகலில்,

பட்டணத்துக்கு நடுவே,

ஐயோ அவன் கையைப் பிடித்து இழுத்துவிட்டதுடன் மட்டும் நின்ருளா? நாக்கு நடுங்காமல் மாமிச உறவுக்காக அழைக்கிருளே!

''என் குழந்தையை நீ மறுவாட்டியும் அடிக்கிறே; என்ன? என் குழந்தைக்கு அப்பன் நீ தாண்டா, வாடா என் ராஜா; இம்பிட்டு நாளும் எங்கேடா பதுங்கியிருந்தே"

சணத்தில் அவள் குழந்தையை அள்ளி அணைத்துக் கொண்டு விம்மி அழுதாள்.

''ஓண்டா என் ராஜாக் கண்ணு' உன் அப்பன் வந்திட்டாண்டா. உன் அப்பன் தாண்டா ராஜாக்கண்ணு உன்னை அடிச்சான் ! வேறை எவனுக்கடா துணிவுவரும், ராஜாக்கண்ணு உன் அப்பனைப் பாற்ரு ராஜாக்கண்ணு !......"

அவள் தொடர்ச்சியாக அவன்தான் குழந்தைக்கு அப்பன் என்று சாதிக்கிருளே !

சமீபத்தில் சந்திரசேகரன் புதிதாக ஒரு மோட்டார் சயிக்கிள் வாங்கியிருந்தான். அவனுடைய சுகபோக யாத்திரைகளுக்கு இப்படி ஒன்று தேவைப்படவே செய்தது.

பளிச் சென்றிருந்த அந்த சயிக்கிளை கள்ளுக்கடை ஒழுங்கையின் ஓரமாக நிறுத்திவிட்டு, பக்கத்து உணவு விடுதிக்குள் அவன் இருந்தான். முன்னேற்பாட்டின்படி வருவிக்கப்பட்டிருந்த நாகரீகப் பேரழகியுடன் நீண்ட நேரத்தை விடு

திக்குள் கழித்துவிட்டு மன உற்சாகத்தோடு சயிக்கிளை எடுக்க வந்தபோது......

இந்தச் சிறு சுட்டிப்பயல் நன்ருக பளிச் சென்ற சயிக்கிளை தாறு மாருகக் கீறல்படுத்திவிட்டானே!

புத்தம் புதிது!

பார்ப்பதற்கே பளிச்சென்றிருந்தது

இப்போது ஒளி மங்கி - சோபை இழந்துவிட்டதே!

கன்னிப் பெண் ஒருத்தியைக் காட்டுமிராண்டித்தனமாக எச்சில்படுத்திவிட்டதைப்போல இந்தச் சுட்டிப்பயல் செய்து விட்டானே!

சந்திரசேகரன் தன்னை முழுதாக மறந்து, அவனை அடித்து விட்டான்.

வந்துவிட்டதே வினை! O

## புதுமை வேண்டாம்

சிலர் சாதி அமைப்பு இருக்க வேண்டும் என்று ஆணித்தரமாகக் கூறிவருகிருர்கள். அவர்களில், வேதாகம தர்மகர்த்தா சபையினரும் ஒரு பகுதியினர். தமிழ் மக்களிடையே சாதிப்பிரிவு இருக்கக் கூடாது; அவர்கள் சமத்துவமாயிருக்க வேண்டும். என்ற போராட்டத்திற்கு எதிராக அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் இவை; "சமத்துவம் அரசியல் தந்திரமாக கையாளப்பட்டு வருகிறது. வருணுச்சிரம தர்மத்துக்கு அது விரோதமானது என்பதை இன்றைய அரசியல் வாதிகள் சிந்திக்க வேண்டும்...... புதுமை கண்டு மயக்கம் கொண்டு அல்லற்பட வேண்டாம். உலகம் தோன்றிய காலம் முதல் பாது காக்கப்பட்டு வரும் சைவப் பண்பாடுகள் சக்தி வாய்ந்தவை. இதனுல்தான் அவை நிலை பெற்றுள்ளன. சைவப் பண்பாட்டை ஒழிக்க முற்படுபவர்கள் தெய்வ தண்டனை பெறுவது நிச்சயம்."

○ குறுநாவல்

# சொந்தக்காரன் ?

7

**பெனடிக்ற்பாலன்**

அடுத்த நாள் பதினுன்காம் திகதி.

காம்பராவை உடைப்பதற்கு துரை யாரையும் அனுப்பவில்லை. சின்னக்கலப்பனுக்கு மீண்டும் ஒரு நம்பிக்கை பிறந்தது. யோசித்து, யோசித்து, நித்திரையின்றி புரண்ட அவன் காலை எழுந்ததும், சோர்வில் இருந்து தன்னை மீட்டு, உஷாரை வரவழைக்துக் கொண்டு, யாருக்கும் சொல்லாமல், கெட்ட வெல கடைத்தெருவுக்கும் வந்து பஸ்சில் ஏறி பதுளையிலுள்ள தொழிற்சங்க காரியாலயத்துக்கு வந்தான். அவன் முகத்தில் படிந்திருந்த துக்கமும், பயச் சோர்வும் கலந்த நிறங்களை மேவி புதிய நம்பிக்கை ஒளி பிறந்திருந்தது.

காலையில் எழுந்து, சாமியைக் கும்பிட்டு, நெற்றியில் திருநீற்றைப் பூசி விட்டிருந்தான்.

தொழிற்சங்கக் காரியாலயத்தில் பிரதிநிதி இராமநாதன் மேசைக்கு முன்னால் இருந்தார். பல தொழிலாளர்கள் தங்கள் தோட்ட தகராறுகளுக்காக வந்திருந்தார்கள். சின்னக் கலப்பன் காரியாலயத்துள், அவதி, அவதியாகச் சென்று தோளில் கிடந்த துண்டால் முக வியர்வையை துடைத்து விட்டான். "என்ன ? ஏன் வந்தீங்கள் ?" என்று ஆச்சர்யத்துடன் கேட்டார் இராமநாதன். பதில் அறியும் ஆவலுடன் அவன் வாங்கு விளிம்பில் குந்தி இருந்து கொண்டு சொன்னான் ;

"சட்டப்படி நேத்து நம்ம காம்பராவை உடைச்சிருக்கணும். ஆனு நேத்து உடைக்கல, யாருமே வரல்லெ இண்ணைக்கு பதின் நான்காம் தேதி. இனி சட்டப்படி காம்பரவெ உடைக்க முடியாது தானுங்களே ?"

இராமநாதன் ஆவலோடு தன்னைப் பார்த்திருக்கும் சின்னக்கலப்பனை நோக்கினார். அவனுடைய களங்கமற்ற புத்தியையும், அவனின் வார்த்தைகளுக்கு உள் அமைந்த ஆதார ஆசைகளையும் புரிந்து கொண்டார். வந்திருக்கும் மற்றத் தொழிலாளர்களையும் பார்த்தார். பின்பு சொன்னார்.

"சின்னக்கலப்பன், நீங்கள் நினைப்பது போல் சட்டங்கள் உங்களைப் பாதுகாப்பதற்கு உண்டாக்கப்பட்டவையல்ல. இந்தச் சட்டங்களெல்லாம் முதலாளிகளைப் பாதுகாப்பதற்குத் தான் உண்டாக்கப்பட்டவை. இவையெல்லாம் அந்தக் காலத்தில் அவங்க வைத்த சட்டங்கள். வெள்ளைக் காரங்களுக்காக வைத்த சட்டங்கள் தான் இன்றைக்கும் சில திருத்தங்களுடன் இருக்கு. தோட்டங்கள் யாருடைய சொத்து. தோட்டம் அவுங்க சொத்து. அவுங்க எண்ணப்படி நீங்க அங்கே கூலிக்கு வேலை செய்யும் கூலிகள். உங்களுக்கு அங்கு உழைப்பதைத் தவிர எந்த உரிமையும் கிடையாது. அவங்க நினைத்த நேரம் நினைத்ததை செய்யலாம். உங்க பக்கம் நியாயம் இருக்கிறதுதான். இருக்கத்தான் செய்யும். ஆனால் சட்டம் அப்படி? சட்டமெல்லாம் ஆர் பக்கம்? நாம் என் செய்வது?"

இராமநாதன் அவனைப் பார்த்து யோசித்தவாறு இருந்தார். சின்னக்கலப்பன் முகத்தில் அந்தப் புதிய நம்பிக்கை ஒளி சிறிது தூரத் தூரப் போய்க்கொண்டிருந்தது.

"நாம் பரம்பரையாக, அந்தத் தோட்டத்திலெ தானுங்களே வேலை செய்து வாறமுங்க"

இராமநாதன் அர்த்தத்தோடு சிரித்து விட்டு தொடர்ந்து சொன்னார். "இந்த நீதியை நாங்க யாரிடம் கேட்கிறதுங்க? தோட்டங்கள் அந்நியனான வெள்ளைக்காரன் கையிலே இருக்கு. சட்டங்களும் அவங்களைப் பாதுகாக்க வைச்சவைதான். நம்ம அரசாங்கமும் அவங்க பக்கம். நாம் என்ன செய்ய முடியும்? அரசாங்கமும் நீங்க இந்த நிலைமையிலதானிருக்க வேண்டுமென்று விரும்புது போலயிருக்கு"

இராமநாதன் அவனையும் அங்கு வந்திருக்கும் மற்ற தொழிலாளர்களையும் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தார்.

"சின்னக்கலப்பன் நான் சொல்லுறன். தொழிற் சங்கம் உங்களுக்காகத்தான் இருக்கு.

இவ்வளவு காலமும் எல்லா தொழிற்சங்கங்களும் உங்களுக்காகத்தான் சேவை செய்திருக்கு. ஆனு உங்க துன்பங்கள் தொலைஞ்சு போச்சா? வாழ்க்கை பழைய நிலையில், பழைய உருவத்தில் தானே இருக்கு? அதில் ஏதாவது மாற்றம் உண்டா?''

"இல்லிங்க!"

"ஆமாங்க!''

இராமநாதன் மௌனமாக இருந்தார் அவர்களுக்கிடையில் சிறிது நேரம் அமைதி நிலவியது.

"இதைத்தான் உங்களுக்கு எப்பவும் சொல்லிக் கொண்டு வாறன். இப்பவும் சொல்லுறன். ஏன் இந்த நாட்டிலே வெள்ளைக்காரன் தோட்டங்களை வைச்சிருக்கான்? உங்களுக்குச் சேவை செய்யவா? ஒரு அட்டை நம்மையறியாமல் நம்ம இருதயத்துள்ளே புகுந்து கடித்து இரத்தம் குடித்துக் கொண்டு இருந்தால், நமக்கு எப்படி இருக்கும்? நாம் என்ன செய்வம்? வேறு ஒரு காரணத்துக்காகவும் அன்றி, லாபத்துக்காக மட்டும் இருந்து கொண்டு நியாயமாக உழைக்கும் உங்களையும், நமது நாட்டையும் அநீதியாகச் சுரண்டிக் கொண்டு, தனது நாட்டுக்கு அனுப்பும் வெள்ளைக்காரனை இந் நாட்டை விட்டு விரட்டாதவரை உங்கள் துன்பங்கள் தீருமா? சொல்லுங்க, ஒரு வருஷத்தில் ஐம்பத்தாறு கோடி ரூபாவை லாபமாக கொண்டு செல்லும் வெள்ளைக்காரன், அவன் சொத்தில், தோட்டத்தில நீங்க தொட சும்மா இருப்பானு? நீங்க உங்க எண்ணப்படி ஒரு காம்பாரவை கட்ட விடுவானு? — வேறை என்ன நான் சொல்லுவது?''

அவர் கூறிவிட்டு, முன்னல் இருந்த தொழிலாளர்களை நோக்கினர்.

"ஆமாங்க"

"நீங்க சொல்றது சரிதாங்க"

பிரதிநிதி இராமநாதனின் முகம் வெறுப்புடன் கோணிக்கொண்டது.

"இந்த ஆமா போடுற புத்திதான் உங்களுக்கு கூடாது. எதற்கும் ஆமாம் போடுவீங்க. ஆனு யோசிக்க மாட்டீங்க. உங்க மோசமான நிலமைக்கு இதுதான் காரணம். இப்ப இருக்கிறதை விட ஒரு நல்ல வாழ்க்கை உங்களுக்கு இருக்கிறது, என்று அறிஞ்சா, இப்ப நடக்கிறது அநீதி என்னு பட்டா, அதை மாத்திறதுக்கு நீங்க தயாரில்லை யென்று, நீங்க

இந்த நிலையில்தானு காலமெல்லாம் இருக்கணும். உங்க தலைவிதி உங்க கையில்தான் இருக்கு யோசிச்சுப் பாருங்க" என்று கூறிவிட்டு சின்னக்கலப்பனை பார்த்துக் கொண்டிருந்தார்.

மற்றத் தொழிலாளர்கள் மௌனமாகஇருந்தார்கள். பிரதிநிதி கூறியதைக் கேட்டுக் கொண்டு நின்ற சின்னக்கலப்பன் அவரை ஒரு முறை பார்த்து விட்டுப் பேசாம வெளியே வந்தான்.

அவன் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை.

நேராக பஸ் நிலையத்துக்கு வந்து, பஸ் ஏறி கெட்டவெல சந்தியில் இறங்கினுன். அவன் பாரம் குறைந்தது, எல்லாச் சுமையும் நெஞ்சுக்குள் நிறைந்து கொண்டது. அவனுடைய உடலே அவனுக்குச் சுமப்பதற்கு கனமாகப்பட்டது. முகம் களை இழந்து, மேலும் சுருங்கி விட்டது.

பிரதிநிதி சொன்னவைகள் உள்ளத்தில், வெள்ளத்தின் குமிழிகள் போல் புதிது புதிதாக உருவாகி உடைய, வாழ்க்கையின் தோல்விகள். ஆசை அழிவுகள் முட்களாக செஞ்சத்தின் உட்சதைகளைப் பிய்த்துக் கொண்டு, மேல் எழ, யாருடனும் பேசமனமின்றி. தெருவைப் பார்த்த வண்ணம் மெதுவாக நடந்து கொண்டிருந்தான்.

"ஏ. சின்னக்கலப்பா, என்ன நீ, எங்கெ பணம், ? இரண்டு மாச மாச்சு ? வட்டியும் இல்லே முதலும் இல்லே!" ஆற்றில் குளித்துவிட்டு, வந்த சின்னபாய், அவன் வட்டிக்கு வாங்கி காம்பராவுக்கு தகரம் வாங்கிய பணத்தைப் பற்றிக் கேட்டான்.

"மறு சம்பளத்துக்கு கொடுத்திடுறன் பாயி"

அவன் வார்த்தைகள் ஜீவனின்றி லேசாகச் ஒலித்தன, தோட்டத்து மேல் ரோட்டில் தண்ணீர்ப் பூவைச் சிந்தி இரைந்து கொண்டிருக்கும் ஆற்று வீழ்ச்சியைக் கடந்து சென்று கொண்டிருக்கும் போது புல்லு அறுக்கும் மாணிக்கம் ஓடி வந்தான். அவன் நெஞ்சும் களைத்தது.

"அண்ணே உங்க, புதுசா கட்டின காம்பராவை உடைக்கிறுங்க"

மாணிக்கமும் அதைக் கட்ட உதவி செய்தவன். அத்துடிப்பு அவனுடைய குரலின் வேகத்தில் தெரிந்தது.

சின்னக்கலப்பன் அவனை பரிதாபமாக, கைகளில்லாத கோழைபோல் திமிர்ந்து

பார்த்து விட்டு சலனமின்றி நடந்து கொண்டிருந்தான்.

"என்னண்ணே ஒங்க பாட்டுக்குப் போறீங்க"?

மாணிக்கம் அவனுடையபின் உருவத்தை அதிசயமாக பார்த்துக்கொண்டு சொன்னான். அந்தக் காம்பாரவைக் கட்டுகின்ற போது கத்தியுடன் நின்ற சின்னக்கலப்பனை அவன் பார்த்திருந்தான். சின்னக்கலப்பன் மார்போடு இரு கைகளையும் கட்டிய வாறு அடியெண்ணி நடந்து கொண்டிருக்கிறான். வீரமுத்துவும், மனைவியும் இன்றைக்கு மாலை இங்கு வருவார்கள். நிச்சயமாக அவர்கள் குதூகலமாக வருவார்கள்.

இதை நினைத்ததும், மந்தைக் கூட்டத்தை விட்டுச் சிதறிய ஆட்டுக்குட்டி போல் அவனுடைய மனம் திசை தெரியாது, அல்லலுற்று கத்திக் கொள்கின்றது. நெஞ்சு மேலும் பாரமாகி வேதனைப் புகையினால் நிறைந்து மங்கப்படுகின்றது.

மனைவியோடு உறங்குவதற்கு ஒரு ஒதுக்கிடம் இல்லை என்ற காரணத்தினால் கல்யாணம் வேண்டாமென்று கூறிய வீரமுத்து இப்பொழுது என்ன செய்யப் போகின்றான்? மேல் றோட்டிலிருந்து அவனிருக்கும் லயத்துக்குச் செல்லும் படிக்கட்டுகளின் முதற்படியில் கால்வைத்தவாறு லயத்தை நோக்கினான்.

அங்கே அவன், தன் கைகளால் கட்டிய அழகான காம்பராவை, நாலைந்து தொழிலாளர்கள் உடைத்துக் கொண்டிருந்தார்கள். அண்ணாமலைக் கங்காணி மேற்பார்வை செய்து கொண்டு நின்றார். தண்ணீர்க் குழாயடிக்கு அருகே, பெரிய துரை கையில் பிரம்புடன், தலையில் தொப்பி அணிந்தவாறு கம்பீரமாக நின்று கொண்டிருந்தான். அவனைச் சுற்றி லயத்து நாய்கள் குலைத்துக் கொண்டு நின்றன.

சின்னக்கலப்பன் நெஞ்சம் நொருங்கிவிட்டது. அவன், இரண்டு அடிகள் எடுத்து வைத்து இறங்கினான்- அவனால் இறங்க முடியவில்லை. கால்கள் சோர, அந்த மூன்றாம்படியிலே குந்தி, இருந்து அவர்களையே கண் வெட்டாது பார்த்துக் கொண்டிருந்தான்.

கண்ணீர் கண்களின் சதைகளை எரித்துக் கொண்டு கன்னங்களால் வழிந்து கொண்டிருந்தது.

○

கட்டுரை ○

# ஏன் இந்தத் தேக்கம்?

— மு. நித்தியானந்தன் —

முழுமையாக ஒரு நூற்றாண்டு காலமாக, வயிற்றுப் பிழைப்புக்காக மட்டுமே இந்தியாவிலிருந்து இங்கு குடியேறி, இரத்தத்தையே நீராக்கி உழைத்து, மனிதனின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீடு போன்ற வசதிகளே கிடைக்கப் பெறாமல்-தங்கள் வயிற்றுக்கு முழு நேரச் சாப்பாட்டிற்கே இல்லாமல், சமூகத்தின் அரசியல் போன்ற நடவடிக்கைகளில் எந்தவிதமான பங்கும் செலுத்த முடியாதவர்களாய், எவ்விதத் தேசிய உணர்வுமின்றி இந்த மலையக மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற நிலையை நினைத்துப் பார்க்கிற போது இந்தநிலைமை எவ்வளவு பயங்கரமானதும் வேதனையானதுமானது என்பதை உணர முடிகிறது.

யுகயுகாந்தரமாக எந்தவிதமான சிந்தனைத்தாக்கமும், அறிவுத் தூண்டுதலும் இல்லாமல், சமுதாயத்தின் கலாச்சார, பொருளாதார அம்சங்களை மட்டுமல்ல, அறிவியல் ரீதியான பண்புகளையும் உணர்வு பூர்வமான சிந்தனைகளையும் இவை தவிர்ந்த சமுதாய வாழ்வின் சகல கூறுகளையும் நாசப்படுத்தத் தக்க அறியாமையை நாங்கள் வளர்த்து வந்திருக்கிறோம். இச் சமுதாயத்தை எழுச்சியுறச் செய்ய வேண்டிய ஒரு கலைமுறை எவ்வளவு தூரம் தாக்கப்பட்டிருக்கும் என்பதை நினைக்கையில் நெஞ்சு கசிகிறது.

வரலாற்றின் தவிர்க்கமுடியாத போக்கில் சமூகத்தில் எல்லாத் துறைகளுமே சீரழிந்து போன நிலையில்—குரல்வளையை நெறிக்கும் ஒரு நெருக்கடியில் இங்கே ஒரு வளர்ச்சி முன்னமேயே முகிழ்த்திருக்க வேண்டும். துரதிருஷ்டவசமாக, அந்த மறுமலர்ச்சி இப்பொழுதுதான் ஊற்றுக்கண் ஆரம்பித்திருக்கிறது. இப்புதிய விழிப்பின் ஓட்டம் முழுமையாகச் சமுதா

யம் முழுவதினின்றும் எழவில்லை என்கிற உண்மையை இங்கு சொல்லியாக வேண்டும். எதுவானாலும், இந்த விழிப்பின் பிரதிபலிப்பாகத்தான் மலையகத்தின் இலக்கியத்துறையில் ஆரம்ப காலப்படைப்புகள் மலர்ந்திருக்கின்றன.

இலக்கியத்தின் சரியான அர்த்தத்தையொட்டி, வாழ்க்கையைச் சரியாக விமரிசித்து சமுதாயத்தின் சகல சிறுமைகளையும் களைந்து மக்களுக்கு எழுச்சி உணர்வு ஊட்டுகிற ரீதியில் இன்றுவரையான மலையகப்படைப்புகளை ஒட்டு மொத்தமாகப் பார்க்கிறபோது படைப்பாளர்கள் சமுதாயத்தைப் பற்றிய ஆழமான பார்வையில்லாமலேயே செயற்பட்டு வந்திருப்பதை அவதானிக்க முடிகிறது. மலையக சமுதாயத்தை மேலோட்டமாகப் பார்ப்பதில் மட்டுமே திருப்தி பட்டுக் கொண்டு இவர்கள் இலக்கியம் படைக்கும் விவகாரத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பது நிதர்சன உண்மையாகிறது.

சமுதாயத்தை ஆழ்த்திக்கொண்டிருக்கும் மையப்பிரச்னைகளை விட்டுவிட்டு அர்த்தமற்ற படைப்புகளில் சில எழுத்தாளர் இந்த ஆரம்பகால கட்டத்திலேயே இறங்கி விட்டிருப்பது, நமக்குப் பெரு நஷ்டமாகிறது. "அட்டைப்படத்துக்கும் சட்டைப் பித்தனுக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேள்விக் குறி போட்டுக் கொண்டும், "காதலிக்க நேரமுண்டு", "விசுவநாதன் வேலை வேண்டும்" "ஏமாறச் சொன்னது நானா?" "துள்ளாத மனமும் துள்ளும்" என்று சினிமாப்பாடல் தலைப்புப் போட்டுக் கொண்டும் இலக்கியம் படைக்க முயல்கிறவர்களுக்கும் இவர்களுக்கும் அதிக வித்தியாசமில்லையென்றுதான் எனக்குத் தோன்றுகிறது.

நமது எழுத்தாளர்களிடமிருந்து மிகப் பிரமாண்டமான பணியினை எதிர் நோக்கி மலையகம் காத்துக்கிடக்கிறது. தங்கள் அயராத உழைப்பால் எங்கோ ஒரு வர்க்கம் வாழ்ந்து கொண்டிருக்க, தாங்கள் அன்றாடப் பிரச்னைகளுக்குக் கூடத் தீர்வு காணமுடியாத நிலையில் நாளும் உழைத்துச் செத்துக் கொண்டிருக்கும் இம்மலையகத்தின் எழுச்சிக்கு நமது படைப்புகள் தூண்டுகோலாயிருக்க வேண்டும். முதலாளித்துவ பொருளாதார அமைப்பின் தவிர்க்க முடியாத உடும்புப் பிடிக்குள்

திணறிக் கொண்டிருக்கும் மலையகமக்கள் தங்கள் நிலையைப் பற்றிய தெளிந்த கண்ணோட்டத்தோடு, உலக சமுதாய வரலாற்றின் சரியான படிப்பினைகள் என்கிற பலத்தோடு முன்னோக்கிச் செல்ல அவர்களைப் பக்குவப்படுத்த வேண்டும். காலாவதியாகி விட்ட கருத்துக்களின் நிழல் கவிந்துநிற்கும் மலையகத்தில் நமது படைப்பாளிகளின் பொறுப்பு அதிமுக்கியமானதாகும். வாழ்க்கையைப்பற்றி, அதனை இயக்குகிற சக்திகளைப் பற்றி, சமுதாயத்திற்கு ஊறு தேடித்தருகிற சிக்கல்களைப் பற்றி நாம் ஆழமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

தோற்றம், ஸ்திதி, மறைவு என்கிற பிரபஞ்சத்தின் இயல்பான ரீதியின் மும் முனைகளில், இடையீடின்றித் தோன்றும் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கான தொடர்பான முயற்சிதான் வாழ்க்கை. மனித வாழ்வின் இயற்கைப்பரிணாம வளர்ச்சியின் முழுமையான விளைச்சல்தான் சமுதாயமாக உருவெடுத்து நிற்கிறது. சமுதாயத்தினை இயக்கும் சக்திகள் உயிர்ப்புள்ளன. சமுதாய அமைப்புகள் சாசுவதமானவையல்ல. கடந்துபோன சமுதாயவரலாற்றுப் பின்னணியில் தான் புதிய சமுதாய அமைப்பு நிலை பெறுகிறது. ஆற்று வெள்ளமாய் ஓடிக் கொண்டிருக்கும் இச் சமுதாயப் பரிணாம வளர்ச்சியின் இழையோடும் ஜீவத்துடிதுடிப்பு, சமுதாயத்தின் முரண்பாடான இரு சக்திகளின் போராட்டத்திலேயே வளர்ச்சி கண்டிருக்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சியோடு ஒத்துப்போகாத கருத்துக்கள் உதிரிகள் ஸ்தானத்தில் செலவாணியற்றுப் போகப் புதுமை வேரூன்றுகிறது. இத்தகைய சமுதாய மாற்றங்கள்—முரண்பாடுகள் வரலாற்றின் தவிர்க்க முடியாத வர்க்கப் போராட்டங்களின் விளைவே. மனித சமுதாயத்தின் சமூக, பொருளாதார அம்சங்களை ஊடுருவிப் பார்க்கிறபோது வர்க்கப் போராட்டங்களின் முக்கியத்துவத்தை உணரலாம். "மனித சமூகத்தின் சரித்திரம், அன்றும், இன்றும் வர்க்கப் போராட்டத்தின் சரித்திரமே." புனல் நிறைக்கும் தொட்டியைப் போல் செல்வர் வலுப்பெற, பொத்தல் இலக்கலமாக ஏழை மக்கள் இருந்து கொண்டிருக்க வரலாற்றுப் போக்கிலே சமுதாயத்தில் முரண்பாடு விளைகிறது. பொருளாதார ரீதியினலான இவ்

வர்க்கப் போராட்டங்களின் மோதுதல்தான் அக்காலச் சமுதாயத்தின் அரசியல், சமயம், கலாச்சாரம் போன்ற துறைகளைப் பாதிக்கிறது. இப் போராட்டங்களின் ஆளுமையில் நசுங்கிக் கொண்டிருக்கும் மலையகமக்களின் மனோ உணர்வுகளை எழுச்சி பெறச் செய்து, அதன் மூலம் சமுதாயத்தின் சகல துறைகளிலும் எழுச்சி ஏற்படச் செய்வோமானால் அந்த எழுச்சியை எவராலும் தடுத்து நிறுத்தி விட முடியாது. வர்க்க பேதமற்ற புதுச் சமுதாய அமைப்பில் நமது பங்கு என்ன என்பதனைப் பற்றித் தெளிவு கொள்ள வேண்டும்.

எனவேதான நமது படைப்பாளிகள் சமுதாயத்தை வழி நடத்திச் செல்கிற சக்திகளை இனங் கண்டு, சமுதாய எழுச்சிக்கான சிந்தனைகளைப் படைப்புகளில் விதைத்துச் செல்ல வேண்டும். பழைமையின் நிழலிலேயே இதங் கண்டு கொண்டிருக்கக் கூடாது, நமது புராதன சமுதாயப் பெருமை மட்டுமே இன்றைய வாழ்க்கை ஓட்டத்திற்கு கை கொடுத்து விடாது.

சமுதாய சூழல்களைக் கீறிப் பிளந்து காட்டவல்ல தீக்ஷண்ய நோக்குடன், தனக்கென உரிய சமுதாயக் கணிப்பீட்டுடன் எழுத்தாளன் இலக்கிய உலகில் இறங்க வேண்டியதாகிறது.

சரியான மக்கள் இலக்கியம் மலையகத்தில் தான் உருவாக முடியும். இம் மலையகமக்களின் அபிலாஷைகள், எழுச்சி, வீழ்ச்சிகள், அநுபவங்கள், தொழில் முறைமை ஆகிய வற்றில்தான் மலையக இலக்கியம் வார்க்கப்பட வேண்டும். மலையக மக்களின் தலையாய பிரச்னைகளை ஆதார சுருதியாகக் கொண்டே இந்த இலக்கியம் சமைக்கப்படவேண்டும்.

பிராந்தியச் சித்தரிப்பால் மட்டும் இந்த வேலை பூரணமாகி விடாது. ஹட்டனையும் பதுளையையும் வைத்துக் கதை எழுதினால் மட்டும் போதாது வர்க்க ரீதியான பிரச்னைகளை என்கிற உயிர்ச் சக்தி அதற்குள் இழையோட வேண்டும்.

சமுதாயத்தின் தவிர்க்க இயலாத தேவைகளை எழுத்தாளன் செவ்வனே உணர்ந்து செயற்பட வேண்டும் சமூகத்தின் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை யொட்டியே சமூகம் வழி நடத்திச் செல்லப்படுகிறது. எனவே, நாட்டின் பொருளாதார ரீதியான அம்சங்களை ஆழமாக ஆராய்ந்து, சமூகத் தேக்கத்திற்கு எங்கே வித்து ஊன்றி நிற்கிறது என்பதை உணர வேண்டும்.

நெஞ்சிலே சிந்தனைத் தெளிவும் சத்திய வேட்கையும் தீட்சண்ய நோக்கும் கொண்டு மலையகப்படைப்பாளிகள் தமது பணியைச் செய்து மலையகத்தின் சமூக, பொருளாதார, கலாச்சாரத் துறைகளில் ஊறிக்கிடக்கும் குறைகளைக் களைய முன் வரவேண்டும்.

"நமக்குத் தொழில் நாட்டுக் குழைத்தல்".

# தேவை

ஒரு சமயம் பணத்துக்கு ரொம்ப முடை. வீட்டில் உணவுச் சாமான்கள் இல்லை. நொந்து போய் பணம் வேண்டுமென்று ஒரு நண்பருக்குக் கடிதம் எழுதியனுப்பினார் பாரதியார். கடிதத்துக்குப் பதில் இல்லை. சாயங்காலம் அந்த நண்பனுஞ் சந்திக்க நேர்ந்தது. "பாரதி! உங்களுக்கு நான் அனுப்பியிருப்பேன். இந்த ஒத்தாசை நான் செய்திருந்தால் உங்களுக்கு மனச் சமாதானம் ஏற்பட்டு, உங்களுடைய மேதையின் கூர்மை மழுங்கிப் போகும். உங்கள் மேதையை அழித்து விட எனக்குச் சம்மதமில்லை" என்று முக்கிக் கொண்டு நண்பர் சொன்னார்.

பாரதியாருக்குத் தாங்க முடியாத ஆத்திரம். "ஓய்! அளப்பை நிறுத்தும். மேதைக்குத் தரித்திரம் மட்டும் போதாதா? அதோடு நீர் ஏளனம் வேறு செய்ய வேண்டுமா? உம்முடைய மனப்பான்மையைச் சீர்திருத்தம் செய்ய முடியாது. அதை அடியோடு, தலைகுப்புற அடிக்கிற புரட்சித் தத்துவம் இந்த நாட்டுக்குத் தேவை" என்று சொல்லிவிட்டு அந்த இடத்தை விட்டு அகன்றார்.

—வ. ரா.

(மகாகவி பாரதியார்)

(ஓகஸ்ட் மாதத் தொடர்ச்சி)

# உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு

'வாமலன்'

பிறநாடுகளிலிருந்து பிரதிநிதிகள் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு வருவதை மலேஷிய அரசாங்கம் தடுத்தபோது அதைப்பற்றி யாதுமூரே யாவரும் கேளிர் என்று 'தமிழோசை எழுப்பியவர்கள்' ஒரு வார்த்தைகூட அபிப்பிராயம் கூறாது மௌனமாக இருந்துவிட்டனர்.

இலங்கையிலும், இந்தியாவிலுமிருந்து மலேஷியாவிற்கு செல்வார்கள் எனத் தமிழ்ப் பேசும் மக்களால் எதிர்பார்க்கப்பட்டிருந்தவர்கள் பலர் மகாநாட்டிற்குச் செல்லவே முடியவில்லை. செல்லவிருக்கிறார்கள் என விளம்பரப்படுத்தப்பட்டவர்களில் சிலர் திடீரென தமது நாட்டு அரசாங்கத்தால் நிறுத்தப்பட்டனர். அத்தகையவர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த தமிழ் ஆராய்ச்சியாளர் நா. வானமாமலையும் ஒருவர். திரு. நா. வானமாமலை போன்றவர்கள் மாநாடு செல்ல முடியாது போனதற்கு சென்னை அரசாங்கம் கொடுத்த விளக்கம் மிகவும் சிரிப்புக்கும், அருவருப்புக்கும் உரியதாகும். தமிழ் வளர்ச்சிக்கு ஒரு சிறு துரும்பைத் தூக்கிப் போடாதவர்களையும், மலேஷியாவில் வியாபாரத் தொடர்பு உள்ள பிரமுகர்களையும், அரசியல் துறையில் பிற்போக்கின் பூரண பந்தங்காவிகளையும் 'தமிழறிஞர்கள்' என உடுப்பு அணிவித்து மலேஷியாவிற்கு அனுப்பிய சென்னை அரசாங்கம் திரு. நா. வானமாமலை போன்றவர்களுக்கு பின்வரும் பதிலை அனுப்பியிருந்தது.

> 'இந்திய அரசு, பிரதிநிதிக்குழுவின் எண்ணிக்கையை மிகவும் குறைத்துவிட்டதோடு, சில பிரதிநிதிகளுக்கே 'P' பாரம் அனுமதி வழங்கியிருப்பதால் உங்களை கோலாலம்பூர் செல்லும் பிரதிநிதிக் குழுவில் சேர்த்துக் கொள்ள முடியவில்லை....'

உல்லாசப் பிரயாணிகளுக்கும் பார்வையாளர்களுக்கும் இடங் கொடுத்து அவர்களை தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு அனுப்பிய போது இந்த எண்ணிக்கைப் பிரச்சினை ஏன் சென்னை அரசாங் கத்திற்குத் தோன்றவில்லை? இதிலிருந்து நமக்கு விளங்குவது என்ன? தமிழறிஞர்கள் இம்மகாநாட்டிற்குச் செல்லப்படுவதை முதலில் இருந்தே தடுக்க முயற்சிகள் நடைபெற்று கடைசியில் அவை பிற்போக்குவாதிகளுக்கு வெற்றியையும் அளித்து விட்டன.

*மகாநாடு தொடங்கிற்று*

உலகத்திலே வாழக் கூடிய சகலதமிழ் அறிஞர்களையும் ஒன்று திரட்டி மாகாநாடு அமைக்கின்றோம். என்ற ஆங்கில ஒலியோடு தமிழாராய்ச்சி மகாநாடு ஆரம்பமாயிற்று.

ஆம்; தமிழாராய்ச்சி மகாநாடு ஆங்கில மொழியில் ஆரம்ப மாயிற்று.

ஆங்கிலத்தில் மகாநாடு கூட்டப்பட்டதற்கு சிலர் எதிர்ப் புத் தெரிவித்தார்கள். பாரதியின் பேத்தி விஜயபாரதி, ம. பொ. சி. முதலியவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தவர்களில் சிலர். இதற்கு முதலில் ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டது. வந்திருந்த பிறமொழி அறிஞர்களுக்கு விளங்குவதற்காக ஆங்கிலத்தில் மகாநாடு வைக்கப்பட்டதாம்! என்ன பதில்! என்ன பதில்!!

இந்த மகாநாடு தமிழரால், தமிழாராய்ச்சி கருதியே கூட் டப்பட்டது. இதிற் கலந்து கொண்ட பிறநாட்டவரில் அனே கர் தமிழ் மொழியில் மிகவும் பரிச்சயமானவர்கள்; தமிழ் சான் றோர். அதிலும் சிலர் தங்கள் தாய்மொழியோடு தமிழை மட்டுமே அறிந்திருந்தவர்கள். மிகச்சிறிய தொகையினருக் குத்தான் தமிழ்மொழி மூலம் நடைபெறுவது விளங்கிக்கொள்ள முடியாத சங்கடமாயிருந்திருக்கும். அவர்களில் — அந்தச் சிறிய தொகையினரின் நன்மைக்காகவா இம்மகாநாடு நடத் தப்பட்டது? இல்லையாயின் இம்மகாநாடு ஆங்கிலத்தில் நடத் தப்பட்டதற்கு காரணம்தான் என்ன?
காரணம் இருக்கின்றது.

இம்மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள், இதனை முக்கிய மாக நின்று நடத்தியவர்கள் ஆங்கில தாசர்கள்; இன்னும் தாய்

மொழியை நேசிக்கக் கூட மனமற்ற அடிவருடிகள். இவர்கள் இம்மகாநாடு உலகமகாநாடாயிருப்பதால் இதனை ஆங்கிலத்தில் நடத்துகின்றோம் என்றும் அறிக்கைகள் விட்டார்கள். தமிழின் பெருமையை ஆங்கிலத்தில் உணர்த்தும் அதிசயம் சிரிப்பிற் குரியது. அந்த மொழியின் பெருமையை அயல் மொழியின் வாயிலாகவே உணர்த்த முடியும், ஆராய முடியும் என்ற விதண்டா வாதங்களால் பாமரத்தமிழனை இலகுவில் நம்ப வைத்துவிடலாம் என்று கருதியா 'தமிழறிஞர்குழாம்' இப்புளுகு மூட்டையை அவிழ்த்து விட்டது ?

இவ்விதமே மலேஷியத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் தமிழன்னை மானபங்கப் படுத்தப்படும் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின.

முதல் நாள் நிகழ்ச்சியின் போது அரசியல்வாதிகளே தமிழறிஞர்களாய் மாறித் தமது ஆராய்ச்சிகளை அவிழ்த்து விட்டனர். சில அரசியல் வாதிகள் தமிழறிஞர்களுக்கு உபதேசம் பொழிந்தனர். ஆராய்ச்சியுரைகள் பத்து நிமிஷங்களுக்குள் சுருக்கமாக அவையினருக்குக் கூறப்படவேண்டும் என்று பணிக்கப்பட்டது. அவர்களும் அதனைச் சிரமேற் கொண்டு தம் கருத்துக்களைச் சுருக்கி மொழிந்தனர்.

மகாநாட்டில் ஆராய்ச்சியுரைகள் வாசித்தபோது, யார் வாசிக்கிறார் என்பதைப் பொறுத்தே கவனிப்பும் இருந்தது. இலங்கையிலிருந்து சென்றவர்கள் சிலர் ஆராய்ச்சியுரைகளை வாசித்தபோது இந்தியப் பிரதிநிதிகள் சிலர் வெளியேறியதும், பேச்சைக் கேட்காமல் அலட்சிய பாவத்தில் இருந்ததும் இலங்கைப் பிரதிநிதிகளை மனப்புழுக்கத்திற்கு உள்ளாக்கிற்று. (ஆயினும் இன்றும் அவர்கள் அதைப்பற்றி ஒரு வார்த்தை சொல்ல வேண்டுமே...கிடையாது. பதிலாக அம்மாமித்தமிழ் இலக்கியகாரருக்கு அவர்களே அபிஷேகம் செய்தார்கள்!)

அத்தோடு மலேஷியாப் புதினத்தாள்கள் இம்மகா நாட்டின் நிகழ்ச்சிகளை வெளியிட்ட போது அரசியல் வாதிகளுக்கே மிக முக்கியமளித்தன. தி. மு. க. நெடுஞ்செழியன், முதலமைச்சர் பக்தவத்சலம், நமது தமிழ்த்தளபதிகள், மலேஷியா மந்திரிகள் ஆகியோரின் பெயர்கள்தான் வானொலி முதல் பத்திரிகை வரை பிரபல்யப் படுத்தப்பட்டன. சில பல்கலைக் கழக விரிவுரையாளர்களின் ஆராய்ச்சியுரைகளை அவர்கள் சொல்லக் கேட்ட பின் அப்படியே திருடிச் சென்று இரவோடிரவாக மலேசியப் பத்

திரிகைகளில் தங்களுடைய கருத்தாகக் கொடுத்த நாவலர் களும், தமிழ்க்கலாமணிகளும் இப்பத்திரிகைகளால் இந் நூற் ருண்டின் அற்புதமான சிந்தனையாளர்கள் எனப் போற்றப்பட் டார்கள்; விருது சூட்டப் பெற்றுர்கள்.

இன்னும் சில ஆராய்ச்சியுரைகள் சிரிக்கவும், அழவும் பயன் பட்டன. இலங்கையிலிருந்துதான் தமிழர்கள் இந்தியாவுக்குக் குடிபெயர்ந்து சென்றனர் என்று ஒருவர் சொல்ல அவரின் ஆராய்ச்சி ஆழத்தை (!) அவையோர் வியக்க......என்ன கல கலப்பு என்ன ஆராய்ச்சித்திறன்! இன்னும் சிலர் ஆராய்ச் சியை வாசித்துக் கொண்டு இடையில் தேவாரபாரயணம் செய் தலும், சிலர் உணர்சி வசப்பட்டு தமிழில் அழுததும் இம் மகா நாட்டிற்கே களையூட்டின. இவர்களை ஏன் அழைத்து வந்தோ மென்று கூட அவர்களை அழைத்து வந்த குழுவினர்கள் பல்லை நருமிக் கொண்டார்களாம். சில குழுக்கள் தலைவருக்கு எதி ராகக் கலகக் கொடி உயர்த்த அவர்களை சமாதானப்படுத்து வதும் அமைப்பாளர்களின் கடனுயிற்றும்.

மகாநாட்டில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளின் சுருக்கங் களில் மிகச் சொற்பமானவையே தமிழிற்கு ஓரளவிற்குப் பயன் தரக்கூடியனவாயிருந்தன. குறிப்பாக தமிழ் மொழிபெயர்ப்பு சம்பந்தமாக எழுதப்பட்ட ஆராய்ச்சியும் வழிமுறையும் இப் போது நமது மொழிக்குத் தேவையானது என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். மகாநாட்டில் வாசிக்கப்பட்ட ஆராய்ச்சி களின் முழு அம்சங்களும் நூல் வடிவில் வெளிவருவதை நாம் எதிர்பார்க்கின்ேறும். அது வந்த பிறகு அந்த ஓரிரு கட்டுரை களையும் நாம் வாசித்து விமர்சிக்கலாம்.

கடைசியாகப் பார்க்கும்பொழுது, இவ்வளவு ஏராளம் பொருட்செலவில் இரண்டு மூன்று கட்டுரைகள்தான் பயனுகத் தேற முடியும் என்ருல் இம்மகாநாடு தோல்வி அடைந்தது என் ருகின்றது. ஆனுல் ஒரு பகுதியினர் - இந்த மகாநாட்டின் சூத்ரதாரிகள் மட்டும் இதைத் தோல்வியென்று கொள்ளாது, இம்மகாநாடு தங்களுக்குக் கிடைத்த மாபெரும் வெற்றி யென்று கருதவில்லையா?

*யார் இந்தச் சூத்ரதாரிகள்?*

சென்ற கட்டுரைத் தொடர்களில் கூறப்பட்டதுபோல இந்த மகாநாடு முற்று முழுதாக அரசியல் நோக்கத்திற்

காகவே கூட்டப்பட்டதென்பதை எவராலும் மறுக்க முடியாது. ஏகாதிபத்தியத்தின் பொம்மை அமைப்பான பிற்போக்குக் கூடாரமான மலேஷியாவில் சகல பிற்போக்குப் பிண்டங்களை ஒன்றுதிரட்ட ஏகாதிபத்தியவாதிகள் எடுத்த முன் முயற்சி தான் மலேஷியாவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகா நாடு. 'அரசியல் கலப்பற்ற தமிழ் மகாநாடு' என்ற போர்வை யில் இம் முற்போக்கு எதிர்ப்பு மகாநாடு நடத்தப்பட்டது. இதன் தயாரிப்பு மிகக் கவனமாக நடைபெற்றது. இலங்கை யில் நடைபெற்ற மகாநாட்டுத் தயாரிப்புக் கூட்டங்களில் இரகசியப் பொலீசார் உலாவினர்களாம். இதுபோல மலேஷியா மகாநாட்டிற்குள்ளும் இரகசியப் பொலிசார் திரிந்ததாக பிரதி நிதிகளே பேசிக்கொண்டார்கள். இந்த நடவடிக்கைகளுக்கு காரணந்தான் என்ன?

அத்தோடு இலங்கையிலுள்ள அமெரிக்க, 'ஆசியா அற நிறுவனம்' கலாநிதி. ஆ. சதாசிவம், திரு. ச. தனஞ்செயராஜ சிங்கம் ஆகியோருக்கு பிரயாண வசதிகள் அளித்ததே, இதற் குக் காரணம் என்ன?

'ஆசிய அறநிறுவனம்' தமிழ்பால் இக்காதல் திடீரெனக் கொண்டது ஏன்? இந்த நிறுவனத்தை உலகம் நன்கு அறி யும். சகல பிற்போக்குத் தந்திரோபாயங்களின் தோற்றுவாய் இது என பத்திரிகைச் செய்திகள் எத்தனைதரம் கூறுகின்றன. சீரழிவு, நாசகார இயக்கங்கள் தமிழ் ஆராய்ச்சிக்கு அள்ளி அள்ளிப் பணத்தை வீசுவது ஏனென்று தேசப்பற்றுள்ள ஒவ் வொருவனும் யோசிக்க வேண்டும்.

மகாநாட்டில் அமெரிக்காவில் படித்துப் பட்டம் பெற்றவர் களுக்கு, அதுவும் இந்தியப் பிரதிநிதிகளுக்கு கூடிய மதிப்புக் கொடுக்கப்பட்டதே, இது எதற்காக?

இவை யாவும் பிற்போக்கு அரசியலின் ஊது குழலாக இம் மகாநாட்டைப் பயன்படுத்தும் முயற்சிகளுக்குக் கொடுக்கப் படும் ஊக்கம்; சன்மானம்; கௌரவம்.

### *பயன் பெற்ற சிலர்*

இலங்கையின் பிரதிநிதிகளாகச் சென்ற இரண்டு பிரமுகர் கள் இரு பென்ஸ் கார்கள் வாங்கி வந்தனர். சில பிரதிநிதிகள் கோயில்களில் உபந்நியாசம் செய்து 'பயன்' பெற்றனர்.

மலேஷியாவிலிருந்து அப்படியே இந்தியா சென்று சினிமா நடிகர், நடிகைகளை இலங்கைக்கு வர ஒழுங்கு செய்து அதனுல் பணம் பெற்றவர்களும் இம் மகாநாட்டிற்கு பங்குபற்றச் சென்றவர்கள்தானும். தங்கள் எஸ்டேற்றைப் பார்த்தவர்களும், மகாநாட்டிற்கென்று சென்று இரவு வாழ்க்கையில் மூழ்கிக் கிடந்தவர்களும், பென்ஷன் ஒழுங்கு செய்தவர்களும், அரசியலால் முரண்பட்டு இடையில் மகாநாட்டை விட்டு வெளியேறியவர்களும்தானும் இம் மகாநாட்டில் முக்கியஸ்தராக இருந்தார்கள் என்பதைக் கேள்விப்படும்போது நிச்சயமாக மொழிப்பற்றுள்ள ஒவ்வொரு தமிழ் மகனும் ரத்தக் கண்ணீர் சிந்தாமல் இருக்க மாட்டான். மகாநாட்டிற்குச் சென்றவர்களையொட்டி இன்னெரு செய்தியும் கூறப்பட்டது. மலேஷியாவிலுள்ள வர்த்தகர்கள் சிற்சில இந்தியப் பிரதிநிதிகள் மூலம் கள்ளக் கடத்தல் செய்வதாகத் தெரிந்து Interpol எனப்படும் சர்வதேசப் பொலிஸ் பகுதி இந்தியப் பொலிஸ் பகுதியை உஷார்ப் படுத்திய செய்திதான் அது.

தமிழாராய்ச்சி கடைசியில் எங்கு போய் முடிந்தது?

இலங்கையில் - இம் மகாநாடு பற்றி குச்சு ஒழுங்கைக்குள் கூட்டம் வைத்தவர்கள், பத்திரிகையில் கட்டுரை எழுதியோர், வானெலிப் பேச்சாளர், வர்த்தகப் பிரமுகர்கள் அரசியல் வாதிகள் ஆகியோர் முழங்கி, திருப்புகழ் பாடி ஆனந்த பரவசமடைந்தனர். ஆனுல் தமிழும், தமிழ் மகனும்?

— இந்தப் படிப்பிணைக்கு அவர்கள் பதில் தந்தே தீருவார்கள்.

●

## அறிவித்தல்

'வசந்தம்' பத்திரிகைக்கு கதை, கவிதை, கட்டுரை, துணுக்குகள் அனுப்பும் சகலரும் தமது சொந்த விலாசத்துடன் அனுப்புதல் வேண்டும். அனுப்பிய விஷயதானங்களைத் திருப்பிப் பெற விரும்புவோர் தபால் செலவை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

# சிரிக்கவும்! அளவும்!! சிந்திக்கவும்!!!

*நச்சுக்கலாச்சாரம்*

அமெரிக்கக் கலாச்சாரம் எங்கெல்லாம் போகின்றதோ அங்கெல்லாம் மனிதன் அழிந்து போகின்றான். தென்வியட்னாமில் மூன்று ரூபா செலவுடன் மிக எளிதாக அமெரிக்கர்கள் பெண்களைப் பெற முடிகின்றது என அமெரிக்க வாலிபர்க்கான இதழொன்று கூறுகிறது. புதிய வியட்னாமியத் தலைமுறையை நாசப்படுத்தும் இந்தக் கலாச்சாரம் உயர்தரக் கல்லூரிகளில் மிகக்கவலைக்கிடமான வகையில் இடம் பெறுகிறது. அமெரிக்க செனட்டர் ஒருவர், 'தென் வியட்னாமை அமெரிக்கா தனது விபச்சார விடுதியாக்கிக் கொள்கிறது எனக் கூறியிருந்தார்.

தற்கொலை, விபச்சாரம், விவாகமுறிவுகள் ஆகிய வற்றில் அமெரிக்காவிற்கு அடுத்த நிலையில் இப்பொழுது யப்பான் நிற்கிறது. 'யப்பானின் பாரம்பரிய கலாச்சார பண்பாடுயாவும் சீரழிந்து அது தன் உன்னதங்களை இழந்து சோகை நோயாளியாய் நிற்கிறதற்கு அமெரிக்கா பெரிதும் உதவிற்று' என இக்ஷேயோடா என்ற யப்பானிய நூலாசிரியர் எழுதுகிறார்.

இலங்கையில் ஆபாசப்படங்கள் பற்றி அடிக்கடி பாரதூரமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. பலர் கைது செய்யப்படுகிறார்கள். கொழும்பில் திடீரென ஆபாசப்படங் காட்டப்பட்ட இடத்தைப் பொலிசார் முற்றுக்கையிட்டு ஆபாசப் படத்தைக் காட்டுவதற்கு உபயோகப்படுத்தப்பட்ட கருவியைக் கைப்பற்றினர். **அந்தக்கருவிகளில் ஒன்று இல்ங்கையிலுள்ள அமெரிக்க தகவல் இலாகாவுக்குச் சொந்தமானது. அமெரிக்க தகவல் இலாகாவின் சினிமாப் படம் காட்டும் கருவி பற்றிய விசாரணையின் போது தகவல் இலாகா அதிபர் தமக்கு ஒன்றுமே தெரியாது என விளக்கம் கொடுத்தார்.** 'கைப்பற்றப்பட்ட' படச்சுருள்களோடு சில கலாச்சார படச் சுருள்களும் இருந்தனவாம். இந்தக்'கலாச்சார'ங்களை அந்நிய தூதரகங்கள் மிக அக்கறையுடன் இங்கு பரப்ப 'சேவை' செய்கின்றன.

தொழிலுக்காக எதுவும்.,

தற்பொழுது வெளிவரும் தமிழ்ப் படங்களில் அரை நிர்வாணம் முக்கால் நிர்வாணத்தில் பெண்கள் தோன்ற ஆரம்பித்துள்ளார்கள். அந்தக் காட்சிகளில் தோன்றத் தயாரான நடிகைகளுக்கே சினிமாவில் நடிக்க இடமும் கிடைத்து வருகின்றது. இதுபற்றி பல பக்திப் படங்களையும், சமூக சீர்திருத்தப் படங்களையும் தயாரிப்பவர் என்று இந்தியப் பத்திரிகைகளால் புகழப்படுபவரான பட அதிபர் ஏ. எல். சீனிவாசன் பின்வருமாறு அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்: "தமிழ்ப்பட நடிகைகளை ஆடைக் குறைப்பு செய்து நடிக்கவிட்டால்தான் ஆங்கில, இந்திப் படங்களுடன் போட்டி போட முடியும்"

## வீதிகளில் சனமும், நாயும்!

சனநாயகத்தின் தாய் என்று கூறப்படும் அமெரிக்காவின் பல தலைநகரங்களில் உள்ள வீதிகளில் பின்வரும் வாசகங்கள் பொறிக்கப்பட்டுள்ளன: 'கறுப்பர்களும் நாய்களும் இவ்வழியால் செல்லக்கூடாது.'

இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் அமெரிக்காவிலுள்ள சிக்காக்கோ பல்கலைக்கழகத்தில் ஆராய்ச்சிப் படிப்பு படித்துக்கொண்டிருந்தார். முதல்நாள் பல்கலைக்கழக விரிவுரை மண்டபத்திற்கு அவர் வெள்ளை மாணவர்கள் போன பிரதான வழியாலேயே சென்றார். அவர் சென்ற போதும், மண்டபத்தில் போய் இருந்தபோதும் அந்தப் பேராசிரியரை எல்லா வெள்ளை மாணவரும் ஆத்திரத்துடன் எரித்து விடுபவர்களைப் போலப் பார்த்தனர். இதை அவர்களின் விரிவுரையாளரும் அவதானித்துவிட்டார்.

விரிவுரை முடிந்ததும் எல்லா மாணவர்களும் மண்டபத்திலிருந்து எழுந்து வெளியே சென்றுகொண்டிருந்தனர். அப்பொழுது விரிவுரையாளர், இலங்கையிலிருந்து போன பேராசிரியரை அழைத்துச் சொன்னார்:

"நீர் வெள்ளை மாணவர்கள் வந்த வழியால் இனிமேல் வரக்கூடாது. அது அவர்களை ஆத்திரமூட்டும் செயலாகும். அதோ அதுதான் நீர் வரவேண்டிய வழியாகும்!"

விரிவுரையாளர் சுட்டிக் காட்டிய பாதையைப் பேராசிரியர் பார்த்தார்:

அதில்- "கறுப்பர்கள் மட்டும்" என்றிருந்தது.

○ தென் ஆபிரிக்கச் சிறுகதை

# இளம் குற்றவாளி

ஜே-ஓதர் மாய்மானே

---

வானத்திலே கதிரவன் வெப்பத்தைப் பொழிந்து கொண்டிருந்தான். அந்த மார்கழி மாத நண்பகல் நேரத்தில் ஜோஹன்ஸ்பர்க் நகரமே சோம்பலில் மூழ்கியிருந்தது; காற்றுக் கூட அசைவற்று நின்றது. துருப்பிடித்துப் போன இரும்புத்தகடுகளாலான சுவர்களுக்கு அப்பாலிருந்து கடகடவென்னும் சப்தம் மந்தமாக வந்து கொண்டிருந்தது. தெருவிலுள்ள பீர் கடைக்கு உல்லாசமாக ஆடி அசைந்து சென்றுகொண்டிருக்கும் கறுப்பர்கள் கூட்டத்தினுள் வளைந்து கவனமாகப் போய்க் கொண்டிருக்கும் மோட்டோர் கார்களின் கிரீச் என்ற 'கோர்ண்' சத்தமும் டயர்கள் தேய்ந்து ஒலிக்கின்ற சப்தமும் அவ்வப் பொழுது கேட்கிறது.

அவன் இரும்புச் சுவரின் மீது சாய்ந்து நின்றதால் அணிந்திருந்த நைந்துபோன சட்டையும் சூடேறியது. அதிலும் சட்டைக் கையில் கிழிந்திருந்த இடத்தில் வெய்யிலில் காய்ந்த இரும்புத்தகடு நெருப்பைப்போல சுட்டது.

"டேய் சான்னி! எனக்குக் கொஞ்சம் இறைச்சி தாடா" அந்தக் கண்கள் கெஞ்சுகின்ற பாவத்தை வெகு காலத்துக்கு முன்பே இழந்து விட்டன. ஆயினும் அவன் குரலில் கெஞ்சல் முழுமையாக இல்லாவிட்டாலும் இலேசாக ஒலித்தது.

"தரமுடியாது; நீ போய் உனக்கு வேண்டியதைத் தேடிக் கொள்" இனிமையாக ஒலிக்க வேண்டிய சிறுவனின் குரல் வாய் நிறைய வறுத்த கறியை அமுக்கியதால் கரகரவெனக் கேட்டது. "உனக்காக நான் போய்த் திருடிக்கொண்டு வரவேண்டுமா?" என்று அவன் கேட்டான். அதே வயதுள்ள வேறு இரு கறுப்புச் சிறுவர்கள் சிறிது தள்ளி உட்கார்ந்திருந்தனர். அவர்களில் ஒருவன் மஞ்சள் சோளத்தைக் கடித்துச் சாப்பிட்டுக் கொண்

டிருந்தான். அடுத்தவன் ஒரு பெரிய நீல நிறச் சர்க்கரை வள்ளிக் கிழங்கைக் கடித்துக் கொண்டிருந்தான். அவர்கள் இருவரும் அவனைப் பார்த்து ஏழனமாகச் சிரித்தனர். அவன் அவர்களது தண்ணீரே பட்டிராத பரட்டைத் தலையைப்பார்த்தான். அவர்களுக்கு அப்பால் தெரிந்த தூசி படிந்து, வெப்பத்தில் வறுத்தெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் கால்பந்து மைதானத்தைப் பார்த்தான்- அவன் பார்வை மீண்டும் சான்னியிடமே திரும்பியது.

சான்னியின் தாடைகள் ஒரே சீராக இயங்குவதைப் பார்க்கப் பார்க்க அவன் வயிறு கிள்ளியது. வயிற்றுப் பசி அக்கினியாய் சுட்டது. அதற்கு முந்தியநாள் இரவிலிருந்து அவன் ஒன்றும் சாப்பிடவில்லை. துரதிஷ்டவசமாக அன்று அவன் நினைத்தது நடைபெறவில்லை. தெருவின் மறுபுறத்திலுள்ள பீர் கடைக்கு வருபவர்களின் சௌகரியத்தை முன்னிட்டு ஈ மொய்த்த இறைச்சி, சோழம்பொரி, இன்னும் பலவகை உணவுகளை விற்பனை செய்யும் கடைக்காரர்களை அவனால் அன்று ஏமாற்றவே முடியவில்லை.

ஒரு வேளை அவன் என்றுமில்லாத பசியோடு இருந்தது காரணமாக இருக்கலாம். எப்படியோ அவன் முயற்சி வெற்றி பெறவில்லை. இப்பொழுது அவன் நண்பர்கள்—அதிலும் அவன் திருடமுடியாது போனபொழுது ஏற்பட்ட சந்தடியைப் பயன்படுத்திக் கொண்டு தங்கள் நண்பகல் உணவுக்கு வழி செய்து கொண்டவர்கள்—அவனுக்கு ஒரு சிறு பங்குகூடக் கொடுக்க மறுத்தனர்.

"சான்னி, தயவு செய்து தாடா!"
"முடியாது"
"நீ எப்பொழுதும் எனக்குத் தருவாயேடா!"
"இன்றைக்கு முடியாது"
"எனக்கு உண்மையிலேயே சரியாய்ப் பசிக்கிறதடா"
"எனக்கும் தான் பசிக்கிறது, போ"

இதற்கு மேலும் கெஞ்சிக் கேட்டிராத அந்தக் கண்களில் ஈரம் படர்ந்தது.

"எனக்கே பசிக்கும் போது உனக்கு எங்கிருந்தடா தருவது"

அவனைப் பையன் என்றுதான் எல்லோரும் கூப்பிடுவார்கள். அவன் உண்மைப் பெயர் என்னவென்று யாரும் கேட்டதில்லை. அந்தப் பையன் சட்டைப் பையிலுள்ள பென்ஸீன் போத்தலைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான். பென்ஸீன் அவனது அழுக்குச் சட்டையில்—அதில் சில துளிகளைத் தெளிக்கலாம். சில தடவைகள் அதை மோந்து பார்த்தாலும் போதும். அவன் வயிற்றுப் பசியையும் வேதனையையும் மறந்து விடுவான். இந்த எண்ணம் வெறுமனே கிடந்த அவன் வயிற்றைக் குமட்டச் செய்தது. மயக்கமாகக் கிடக்கக் கூட முடியாத அளவுக்கு அவனுக்குப் பசி ஏற்பட்டிருந்தது. ஏதாவது சாப்பிட்டபிறகு வேண்டுமானால் அப்படிச் செய்யலாம்......

வயிற்றுவலி அதிகமாகிக் கொண்டிருந்ததால் அவனால் நேராக நிற்க முடியவில்லை. சுவர்மீது சாய்ந்து நின்றான். நிற்க முடியாது போய்விட்டது. அவன் தலை சுற்றியது, காதுகள் அடைத்தன. கண்கள் பஞ்சடைத்தன. "தொலைந்து போகட்டும்! கழிசடைகள்! என் தாய் ஒழியட்டும்; என் தகப்பனும் ஒழியட்டும், எல்லாம் சனியன்கள்!"

அவன் நண்பர்கள் மெதுவாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தனர். அந்தப் பதின்மூன்று வயதுக் குரல், தான் இதுவரை கேட்டிருந்த வசவுச் சொற்களையெல்லாம் தன் பெற்றோர்கள் மீது சரமாரியாகக் கோபாவேசத்தோடு அர்ச்சித்துக் கொண்டிருந்தது. அவன் இந்த நிலைக்கு வர ஐந்துவருஷங்களாயின. எல்லாம் அவன் தாயார் "ஹோப்பஸ்" என்னும் மதுபானத்தைக் குடிக்க ஆரம்பித்ததிலிருந்து வந்த வினைதான். ஜோஹான்ஸ்பர்க் நகரத்தின் பல பகுதிகளிலும் தயாரிக்கப்பட்டுவந்த பலவிதமான நாட்டுச் சாராயங்களில் அதுவும் ஒன்று. பொலிசார் கண்களிலிருந்து மறைப்பதற்காகவும், கெதியாகப் புளிப்பேறுவதற்காகவும் அதைப் புதைத்து வைப்பார்கள். ஆரம்பத்தில் ஒரு கலன் ஹோப்பஸ் கொடுத்தால்தான் அவளுக்கு மயக்கம் உண்டாகும். அவள் உடலில் இன்னும் வலு இருந்தது.

வாரக் கடைசியில் நெடுநேரம்வரை நடைபெறும் களியாட்ட இரவுகள் தோறும் அவன் மயக்கமடைவதற்குத் தேவையான மதுபான அளவு குறைந்து கொண்டே வந்தது. அவர்கள் வீடு

என்று அழைத்து வந்த புகைபடிந்த கூடாரம் ஓர்லண்டோ ரெயில் பாதையின் அருகே அமைந்திருந்தது. அந்தக் குடிசைக்குள் அவள் தள்ளாடி நுழையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவன் தந்தை அவனை அடித்து வேதனைப்படுத்துவான். அப்படி ஒவ்வொருமுறை அடிபட்ட பொழுதும் மேலும் மேலும் குடிக்க வேண்டுமென்னும் தணியாத ஆசை அவளுக்கு உண்டாயிற்று.

போகப்போக அவளது முரட்டுப் பிடிவாதம் அதிகரித்தது. அவன் தந்தை அடிக்கும் பொழுது அவள் எதிர்த்துச் சண்டை போட ஆரம்பித்தாள். குடிபோதையிலிருக்கும் பெண்ணுக்கும், குடிபோதையிலிருக்கும் ஆணுக்கும் சண்டை நடக்கும். வீட்டிலிருக்கும் ஒன்றிரண்டு மரச்சாமான்களும், நாற்காலிகளும் உடைபடும். இற்றுப் போன கதவை இணைப்போடு சேர்த்துப் பிடித்துக் கொண்டு வீட்டு வாசலில் எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கும் சகதியிலும் சேற்றிலும் அவர்கள் இருவரும் விழுந்து புரளுவார்கள்.

அடித்தும் உதைத்தும் பிராண்டிக்கொண்டும் அவர்கள் கிடப்பார்கள். அவர்கள் வாயிலிருந்து வரும் வசவுச் சொற்களுக்கு கணக்கே இராது. இவை அனைத்தையும் பக்கத்து வீட்டுக்காரர்கள் சுற்றிலும் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பார்கள். அந்தப் பாதை வழியாகச் செல்பவர்கள் சேறுபடிந்த நிலையில் விடாப்பிடியாகச் சண்டை போட்டுக் கொண்டிருக்கும் அந்த அரை நிர்வாண உடல்களை ஏறி மிதித்துக் கொண்டு செல்வார்கள். யாராவது அவர்களைப் பிரித்து விடும் வரையில் அப்படியே கிடப்பார்கள். அல்லது சண்டைபிடிக்க இயலாது சோர்ந்து போய், எழுந்திருக்கவும் வலிமையற்றுக் கிடப்பார்கள்,

இரவு வந்த பின்னர் அவர்களுக்கிடையே விசித்திரமான சமாதானம் ஏற்படும். சிறிது நேரத்தில் அமைதியாக நித்திரையாய் போய் விடுவார்கள்.

அவனுடைய தந்தை வெளியே சென்று சிறிது சிறிதாக வீட்டுக்கு வருவதைக் குறைத்துக் கொண்டார். இரவு வேளைகளில் நேரம் கழித்தே வீட்டுக்கு வருவார். வீட்டுக்கு வந்தால்

அந்த சாமத்திலே அதற்கப்பாலோ அமைதியைக் குலைத்துக் கொண்டு அவர்களுடைய சண்டைக்குரலும், ஓலமும் கேட்க ஆரம்பித்து விடும். அதற்குப்பின்னர் புதிய புதிய ஆண்கள் வீட்டுக்கு வர ஆரம்பித்தார்கள் அதிலும் அவன் தந்தை அன்றிரவு வரமாட்டாரென அவளுக்கு நிச்சயமாகத் தெரிகின்ற நாட்களில் வெகு நேரம் கழித்து இரவில் அவர்கள் வருவார்கள். அதன் பிறகு அவன் தந்தை கிழமைக் கணக்கில் வராமல் இருக்க ஆரம்பித்தார். அந்தச் சமயங்களில் சிறிது முன்னதாகவே ஆண்கள் அந்த வீட்டுக்கு வர ஆரம்பித்தார்கள்.

அவர்களில் கலைந்து கிடக்கும் தாடியும், தழும்புகள் காணப்படும் முகமும் கொண்ட ஒருவன் மிகவும் அவசரக்காரன். மதுபானம் அருந்தியதுமே சிருங்காரச் செயல்களை ஆரம்பித்து விடுவான். அவள் ஆரம்பத்தில் மறுத்தாள். "சிறிது பொறு முதலில் அவன் நித்திரை கொள்ளட்டும்" என்பாள். ஆனால் 'ஹொரபஸ்' பானத்தின் போதை தலைக்கேற, தன் மகனின் கலக்கம் நிறைந்த கண்களுக்கு முன்பே அவள் பாவச் செயலில் ஈடுபடுவாள். அதற்குப் பின்னர் வழக்கம்போல முணுமுணுப்பும் ஆழ்ந்து சுவாசிக்கும் சப்தமும் கேட்கும். மினுக் மினுக்கென எரிந்துகொண்டிருக்கும் மெழுகுவர்த்தியில் அவன் அங்கு நடைபெறுவனவற்றைப் பார்க்கும் அளவுக்குப் போதுமான வெளிச்சம் இருக்கும். முதல் நாளிரவு அவன் அழுதபடியே நித்திரையாய்ப் போய்விட்டான். அவன் அழுத கடைசி முறை அதுவே.

ஒரு முறை இருவாரங்கள் வெளியே தங்கியிருந்துவிட்டு அவன் தந்தை வீட்டுக்குத் திரும்பி வந்தார். அதற்கு முந்திய பத்துத் தினங்களாக ஒருவன் அவர்கள் வீட்டில் தொடர்ச்சியாக இருந்து வந்தான். அவன் உரிமையோடு படுக்கையில் படுத்திருப்பதை அவன் தந்தை கண்டார். அன்று ஒரு பெரும் யுத்தம் நடைபெற்றது. மூவரும் தெளிந்த சுய நினைவோடுதான் இருந்தனர். அவன் தந்தை வீங்கிய கண்களோடும், பிளந்த உதடுகளோடும் தன் துணிமணிகளை எடுத்துக் கொண்டு வீட்டை விட்டு வெளியேறினான்.

'ஒழுக்கம் கெட்ட பெண்ணோடு நான் குடும்பம் நடத்த மாட்டேன்' என்று அவன் தந்தை பக்கத்து வீட்டுக்காரர்களிடம் உறுதியாகச் சொன்னார். அவர் வீட்டைவிட்டுப் போகும் போது "வேறு பெண்களை வைத்திருக்கும் அவரோடு குடும்பம் நடத்த மாட்டேன்" என்று அவன் தாய் ஆங்காரமாகக் கூறினாள். மறுநாள் காலையில் அவன் தாய், வீட்டுக்குத் தொடர்ச்சியாக வந்துகொண்டிருந்த நபரை 'தந்தை' என அழைக்கவேண்டுமென்று அவனிடம் கூறினாள். அவன் மறுத்தான். தாய் கோபத்தோடு அவனை உதைத்தாள், அதற்குப் பிறகு அவனுக்குக் கிடைத்த உதைகளும் அடிகளும் அதுதான் ஆரம்பம். அவன் அழவில்லை. இது அவன் தாயாருக்குக் கோபத்தை இரட்டிப்பாக்கியது.

அவனுக்குத் தொடர்ந்து கிடைத்து வந்த அடிகளின் விளைவாக, அவன் வேறு வழியின்றி, வீட்டை விட்டோடி, தன் தந்தையைத் தேட முடிவு செய்தான். அந்தத் தெருவிலிருக்கும் குழாயடியில் பெண்கள் கூடி நின்று கதைத்ததிலிருந்து, தந்தை ஜியார்ஜ்கோச்சில் இருப்பதாகவும், அங்கு வேறொரு பெண்ணோடு வாழ்க்கை நடத்துவதாகவும் அவனுக்கு அறிய நேர்ந்தது.

ரெயிலில் தின்பண்டங்கள் விற்றுப் பிழைக்கும் அவனின் நண்பனொருவனை விசாரித்து ஜியார்ஜ்கோச் என்னும் சிறிய ஸ்ரேசனில் ரெயிலுக்காகக் காத்து நின்று, ஒரு மாதிரியாக ஏறி விட்டான். ஜியார்ஜ்கோச் நகரம் எங்குருக்கிறது? - வீடுகள் எங்கிருக்கின்றது?"

"பாலத்துக்கு அப்பால் இருக்கிறது தம்பி. தெருவைக் கடந்து செல் – ஆனால் கார்கள் வரும். பார்த்துச் செல்ல வேண்டும். தெருவை ஒட்டியே சென்றால் போதும், வீடுகள் வந்துவிடும், அங்கே போய் பெயரை விசாரித்தால் தெரியும்" என்று ரெயிலில் உள்ளவர்கள் சொன்னார்கள். ரெயில் நின்றதும் படாரென்று குதித்து நடக்கத் தொடங்கினான்.

"என் தகப்பனைத் தெரியுமா?"

"உன் தகப்பனார் பெயர் என்ன?"

"ஜோஹான்ஸ்"

"அவன் முழுப்பெயர் என்ன?"

"எனக்குத் தெரியாது"

"நீ எங்கிருந்து வருகிறாய்?"

"ஓர்லண்டோ பகுதியிலிருந்து"

"அடப்பாவமே!..........!"

அந்தக் குறுகிய பாதைகளில் மேலும் கீழுமாக அவன் நடந்தான். அந்தப் பாதைகளின் இரு புறங்களிலும் தீப்பெட்டி அளவேயுள்ள சிறிய வீடுகள் காணப்பட்டன. அந்த வீடுகளில் அழுக்கேறிய முன்பகுதிகள் ஒரே மாதிரியான கோரத் தன்மையோடு விளங்கின. வீடுகளின் முன்புள்ள தபால்தலை அளவேயுள்ள சிறு வெற்றிடங்களில் காணப்பட்ட பழமரங்களுக்குப் பின்னால் அந்த வீடுகள் கூசி மறைந்து கொள்வது போலத் தென்பட்டன.

இந்தப் பகுதியில் வழி தெரிந்து கொள்வது கடினம். வீடுகள் தெருக்கள் - ஏன்? மரங்கள்கூட ஒரே மாதிரியாகத் தோற்றமளித்தன.

"ஒரு ரொட்டித் துண்டு தாருங்கள், தாயே"

"சீ, போ!"

"தயவுசெய்து ஒரு ரொட்டித் துண்டு தாருங்கள், தாயே"

"நீ யார் பிள்ளையப்பா?"

"தயவுசெய்து ஒரு ரொட்டித் துண்டு தாருங்கள், தாயே"

"இந்தா - இதை வாங்கிக்கொண்டு போய்த் தொலை"

"தயவுசெய்து கொஞ்சம் இறைச்சித் துண்டு தாருங்கள், தாயே ! சாப்பிட்டு நாளாகிறது."

"அது சும்மா கிடைக்காதடா, பயலே, நீ வேலை செய்வாயா?"

"நன்றாக வேலை செய்வேன், தாயே! எவ்வளவு வேண்டுமானாலும் பாடுபட்டு உழைக்கிறேன்;"

"அப்படியானால் உள்ளே வா"

பெரிய பெரிய அண்டாக்கள், அவற்றை நெருங்கினாலே நாற்றம் குடலை உருவுகிறது. மாலையில் சாராயம் காய்ச்ச அவை தயாராக இருக்க வேண்டும்.

இவள் "ஹொப்ஸ்" பானம் தயாரிப்பவளோ?

சூரியன் மறைந்ததும் வேலி போடப்பட்ட அந்த கதவுக் கருகில் நின்றுகொண்டிருந்தான். உள்ளே நுழைவதற்கு அது ஒன்றுதான் வழி. நூற்றுக் கணக்கான ஆண்களும் பெண்களும் உள்ளே வந்தார்கள். ஆனால் அவன் தந்தையைக் காணவில்லை.

மறுபடியும் அந்தப் பருத்த அழுக்குப் பிடித்த பெண் ணிடம் சென்றான். பெரிய பெரிய அழுக்குப் பிடித்த அண் டாக்களில் சாராயம் காய்ச்சினான்.

"நான் இன்னும் அதிகமாக வேலை செய்தால், எனக்குக் கொஞ்சம் உணவு தருவீர்களா தாயே! நான் இங்கேயே நித் திரை கொள்ளட்டுமா?"

அவள் ஒப்புக்கொண்டாள்.

சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் சாராயம் காய்ச்சும் வேலை இருக்காது. ஏனென்றால் அதற்கு முன்பே ஏராளமான சாராயம் காய்ச்சப்பட்டிருக்கும். அவன் அந்தத் தினங்களில் சந்தடி வரும் ஒவ்வொரு பகுதிக்கும் சென்று, ஒவ்வொரு முகத் தையும் உற்றுப் பார்ப்பான். ஆனால் மற்றவர்களிடம் விசாரிப் பதை நிறுத்திவிட்டான்.

அடுத்த சனிக்கிழமையன்று அவன் தந்தையைப் பார்த் தான். அவர்கள் குடித்துவிட்டுச் சிரித்துக் கும்மாளமிடும் இடம் மட்டும் இருட்டாக இல்லையென்றால் அவன் முன்பே அவரைக் கண்டு பிடித்திருப்பான். அவர் சட்டைக் கையைப் பிடித்து வெகு நேரம் இழுத்த பிறகுதான் அவர் அவனைக் கண்டுகொண் டார். மங்கலான தீக்ஷண்யமற்ற இரு கண்கள் அவனை உற்று நோக்கின;

"உனக்கு என்னடா வேண்டும்?"

"என்னைத் தெரியவில்லையா அப்பா,?"

சிவந்த இரு கண்கள் அவனை வெகுநேரம் உற்றுப் பார்த்தன. வயிற்றிலிருந்து வந்த ஏப்பத்தில் நாற்ற மெடுத்துப்போன பீர் வீசியது.

"நீ என் மகனா?"

"ஆமாம், அப்பா"

அவன் கலகலவெனச் சிரித்தான். நான் உங்களைத் தேடினேன்...... பல நாட்களாகத் தேடினேன் என்றான்.

"கெட்டிக்காரன்!" அவன் கழுத்தைச் சுற்றிப் போடப் பட்ட கை அவனை அணைத்து மூச்சுத் திணறச் செய்தது.

"இந்தச் சிறுவனைத் தெரிகிறதா, குமாலோ? இவன் தான், என் பையன். அநேக நாட்களாகப் பார்க்கவில்லை. ஓர்லண்டோவிலிருந்து தன் தகப்பனாரைத் தேடி இவ்வளவு தூரம் வந்திருக்கின்றான். கெட்டிக்காரன். தாயார்தான் பிர யோசனமில்லாத கழிசடை. மதுபானம் வாங்கிக் கொடுக் கும் கண்ட பயல்களையெல்லாம் வீட்டோடு வைத்துக் கொள்கிறாள்."

அவன் தந்தை மறுபடியும் ஏப்பம் விட்டார். அவன் மெள்ள அவர் வாயையும் மூக்கையும் பொத்தினான்.

"நான் உன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்லுவேன். நம் வீடுதான், கவலைப்படாதே. உன் புதுத் தாயாரைப் பார்க்கலாம். அவள் மிகவும் நல்லவள். உனக்கொரு தங்கை கூடப் பிறந்திருக்கிறாள்."

என்ன? புதுத் தாயாரா? போனதடவை புதிய தகப்ப னார். அதிர்ச்சியென்னும் கடினமான 'ஜில்' லென்ற கரங்கள் அவன் அடிவயிற்றைப் பற்றித் திருகின. ஒருவேளை, நான் அவளை அம்மாவென்று கூப்பிடவேண்டுமென வற்புறுத்த மாட்டாள். அல்லது எனக்கே அவளைப்பிடித்துப் போய் அம்மா வென்று கூப்பிடுவேனோ! என்னவோ? யார் கண்டார்கள்.

அவன் தந்தையைத் தாங்கிக் கொண்டு தெருக்களிலே நடந்து சென்றான். தெருவிளக்கின் வெளிச்சத்தைக் கடந்து செல்லும் போது அவர்களுக்கு முன்பாக நீண்ட நிழல்கள் தெரிந்தன. அந்த நிழல்கள் சிறிது சிறிதாகக் குறைந்து அடுத்த விளக்கின் வெளிச்சத்திற்குள் வரும் பொழுது, உருண்டு மொத்தையாகிவிடும். பின்னர் மறுபடியும் நீண்ட நிழல்கள்; உடனே நிழல்கள் குறுகும். பின்னர், உருண்டு மொத்தை யான நிழற்குவியல்கள்

அவர்கள் ஒரு கதவைத்திறந்து உட்புறம் சென்றார்கள். பின்புற வெளியோரமாக ஒரு தகரக் குடிசை. அந்தக் குடிசை யின் தாழ்ந்த கதவில் பலமாகத் தட்டினார்கள்.

"யாரது?"

"நான் தான்" சிறிது மௌனம்.

திறப்பைத் துவாரத்தினுள் நுழைத்துத் திருகும் சத்தம் கேட்கிறது; கதவு கிரீச்சிட்டுக் கொண்டே திறக்கிறது; வெளிச்சம் பாய்கிறது.

அந்தக் குடிசையினுள் இடம் சிறியதுதான். அதில் ஓர் இரட்டைக் கட்டில், அடுக்கிய செங்கற்கள் மீது வைக்கப்பட்டிருக்கிறது. முன்புறக் கண்ணுடி உடைந்துபோன ஒரு நாற்காலி; ஒரு பெரிய முட்டைவடிவ மேசை, ஒரு படுக்கை, இவைதான் அங்கே இருக்கும் பொருட்கள். உள்ளுக்குள் வெப்பமாகவும், புழுக்கமாகவும் இருக்கிறது. அழுது சிணுங்கிக் கொண்டிருக்கும் ஒரு குழந்தை அந்தப் பெண்ணின் வளைந்த இடையில் அமர்ந்திருக்கின்றது.

"நீ மறுபடியும் குடித்து விட்டு வந்திருக்கிறாய்? யார் அந்த அழுக்குப் பிடித்த பயல்?"

"பையனு... அழுக்கா? ஓ! அவனு!! என் மகன்தான். தன் தகப்பனோடு இருக்க வேண்டுமென்று ஓர்லண்டோவிலிருந்து இங்கு வந்திருக்கிறான்."

"ஆமாம், என் மகனல்லவா? என்ன, சரிதானே?"

அவன் அங்கு மூன்று மாதங்கள் தங்கியிருந்தான். அதற்குப் பின்னர் அந்த வீட்டை விட்டு வெளியேறிவிட்டான். அந்தப் பெண்ணை 'அம்மா' என்று அழைக்க வேண்டுமென யாரும் அவனை வற்புறுத்தவில்லை. ஆயினும் அவன்தானாகவே முன் வந்து அம்மா என்று கூப்பிட்டான்.

"டேய்! சந்தோஷமாயிருக்கிறாயா? அப்பாவின் புதுவீடு மனதுக்குப் பிடித்திருக்கிறதா? உன் புதுத் தாயார் எப்படி? மிகவும் நல்லவள், ஓர்லண்டோவில் இருந்தாளே, அந்தச்சனியனைப் போல அல்ல அவள்........

"அவள் என்னைப் பெற்று வளர்த்தவள். அவளைப் பற்றி இப்படியெல்லாம் பேசாதீர்கள்."

"ஓகோ! உன் தகப்பனிடமே எதிர்த்துப் பேசுகிறாயா?

"என் தாயாரைப் பற்றி என்னிடமே இப்படிப் பேசலாமா?

"ஓகோ!"

யாரும் அவனிடம் அதிகமாகப் பேசுவதில்லை. அவனுக்கு இரண்டு வேளை உணவு கிடைத்தது. படுத்து நித்திரை செய்வதற்குக் கட்டில் இருந்தது; அவ்வளவுதான். அவன் மனத்திருப்திக்கு அங்கு எதுவுமில்லை. அவன் குடும்பச் சூழலைத்தேடி

அங்கு வந்தான். ஆனால் அவனுக்குக் கிடைத்ததோ சாப்பிட வும், படுத்து நித்திரை செய்யவும் ஒரு வீடு; அவ்வளவுதான்.

"பையைத் தூக்கிக் கொண்டு வரவா, அம்மா ?

"டேய் ! பிச்சை எடுக்கிறாயா ? இங்கே பிச்சை எடுக்கக் கூடாது. தெரியுமா ?

"நான் பிச்சை எடுக்கவில்லை. சாப்பாட்டுக்காகக் கூலிவேலை செய்கிறேன்."

"என்னை எதிர்த்துப் பேசுகிறாயா ? உன்னைக் கைது செய் யச் சொல்கிறேன் பார்......" அவ்வளவுதான் அவன் ஓடியே போய்விட்டான். சனிக்கிழமை காலை சந்தைக் கூட்டத்திலுள் புகுந்து மறைந்து விட்டான்.

அப்பொழுதுதான் வறுக்கப்பட்ட இறைச்சியின் மணம் அசைவற்று நின்றது சூடான காற்றிலே கலந்து, பிற வாசனை களிலிருந்து தனித்து நின்று அந்த வாசனையை மோந்ததும் அவனுக்குப் பசி உண்டாகியது. மயக்கம் ஏற்பட்டது.

சிவப்பு வர்ணம் பூசிய இரும்புச் சுவருக்கு அப்பாலிருந்து கசடியேறிய மதுவின் ஈரமணம் அவனை நோக்கி வந்தது. நிலக் கரி அடுப்பிலிருந்தும், பலகார மேசைகளிலிருந்தும் வந்த சூடான இறைச்சியின் 'கம்' மென்ற வாசனை அவனை 'வா' வென்று அழைத்தது,

நான் எவ்வளவு நேரமாக இங்கு நின்று கொண்டிருக்கிறேன் யாராவது எனக்குக் கொஞ்சம் இறைச்சி தந்து, என் வாயி லிருக்கும் வறட்சியைப் போக்க மாட்டார்களா ?

"ஏ ! இங்கே வா !"

அவன் சற்று முற்றும் பார்த்தான். ஒல்லியான ஒரு சிறு வன் அவனைப் போலவே பசியால் வாடியவன், அங்கு நின்று கொண்டிருந்தான். அவனின் குச்சிபோன்ற கழுத்துக்கு அவன் தலை பெரிதாகத் தெரிந்தது. குழி விழுந்து கொண்டிருந்த அந் தக் கண்களில் ஒரு இரகசியக் கேள்வி மறைந்திருந்தது.

"என்ன ?"

"உனக்குப் பசியா ?"

"ஆமாம் !"

"சரி, இங்கே வா,"

அவர்கள் இருவரும் தெருவைக் கடந்து ரெயில்பாதை வழியாகச் சென்று, அருப்பிடித்து உதிர்ந்து கொண்டிருந்த இரும்புச் சுவரின் ஓரமாகச் சென்றார்கள். அங்கே சில பையன் கள் கும்பலாக உட்கார்ந்து புகை பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

"நீ எந்த ஊர் ?"

"சொந்த ஊர் ஓர்லாண்டோ; இப்பொழுது ஜியார்கோர்ச்சி லிருந்து வருகிறேன்."

"உனக்குப் பசியாய் இருக்கிறதா ? எங்களோடு சேர்ந்து திருட வருகிறாயா ?"

"சரி, வருகிறேன். எனக்கு உணவுதான் வேண்டும்"

"உனக்குப் பயமாக இருக்கிறதா ?"

"ஆமாம்...... இல்லை."

"இதைச் சாப்பிடு துணிச்சல் வரும்."

அழுக்குப் படிந்து பந்துபோல உருண்டிருந்த கந்தைத் துணி, அதில் பென்ஸீன் நாற்றம் வீசியது.

"வாயில் போட்டுக்கொண்டு அதைப் பிடித்து இழு."

அதை வாயில் போட்டதும், அவனது வரண்டுபோன தொண்டையை ஏதோ எரிப்பது போல இருந்தது. நரம்புகள் முறுக்கேறின. அவன் பல தடவைகள் இருமினான். கால்கள் தள்ளாடிக் கீழே விழுந்தான். வாந்தியெடுக்க முயற்சிக்தான். ஏதோ ஒரு கிழிந்த நாடாப் போலச் சளி அவன் கீழுதட்டி லிருந்து தொங்கியது.

"ஹா.... ஹா... ஹா....அட பயலே"

"சரி, அவனுக்கு இப்போது பசிக்கிறது. சாப்பிடும் நேரமும் வந்து விட்டதல்லவா ? டேய் ! நீ இங்கேயே இரு; நான் போய்ச் சீக்கிரம் உனக்கு ஏதாவது கொண்டு வருகிறேன்."

அவன் அந்தப் புல் தரையில் குப்புறப் படுத்துக் கிடந் தான். அவன் மீண்டும் வாந்தி எடுக்க முயற்சித்தான். ஒன்றும் வரவில்லை. அவன் காறித்துப்பினான். பீர் கடைக்கு வெளியே உணவுப் பதார்த்தங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் பகுதி யிலிருந்து கூச்சல் கேட்டது. விரைந்தோடி வரும் கால்களில் சத்தமும் கரகரத்த குரலில் அதட்டுவதும் கேட்டது. அவர் கள் அனைவரும் வந்து அவனைச் சுற்றி உட்கார்ந்து கொண் டார்கள்.

"இந்தா, சாப்பிடு !"

"இதெல்லாம் எங்கே கிடைத்தது ?"

"நாங்கள் திருடினோம்."

கடைக்காரர்கள் உங்களைப் பிடிக்க மாட்டார்களா ?"

"சும்மா போடா ! கடையை விட்டு விட்டு ஒரு நிமிஷமா வது அவர்கள் வரமுடியுமா, என்ன ?

(அடுத்த இதழில் முடியும்)

○ கவிதை

# பொற்காலம்

கல் தோன்றி மண் தோன்றாக் காலம் சென்று
கடல் தாண்டிப் போவதற்குக் கப்பல் தோன்றி,
மில் தோன்றித் தைப்பதற்கு மிசினும் தோன்றி,
விண் கடந்து வெளிச் செல்ல வாணி தோன்றி
'எல்லாரும் சமமாக வாழல் வேண்டும்'
என்று சொல்லும் பொதுமை எண்ணம் எழுந்த பின்னும்,
பல் தோன்றாப் பாலகர்போல் - சில பேர் இன்னும்
பழங்காலம் பொற்காலம் என்று சொல்வார்.

சங்கத்தின் உன்னதத்தை வருணிப் பார்கள்;
சாவகத்தை வென்றமையை விவரிப்பார்கள்;
எங்கும் உயர் புலிக்கொடியை எழுப்பி ஆண்ட
எங்களவன் மாட்சிமையை எடுத்துச் சொல்வார்.
கங்கை கொண்டோம் என்பார்கள்; படை திரட்டிக்
கலிங்கம் எறிந் தோம் என்றும் காட்டு வார்கள்.
இங்கினிமேல் நாம் முயன்றால் எய்த லாகும்
இனியும் ஒரு பொற்காலம் என்ப தோரார்.

கலி முற்றிப் போயிற்றென் றழுவார்; ஆயின்,
கல்வீடு, மின் விசிறி, உறைவுப் பெட்டி,
ஒலிபெருக்கும் இசைக்கருவி, தொலைவுப் பன்னி,
ஒளி அசைவுப் படம் காட்டல் முதலா யுள்ள
பல நலங்கள் தோன்றுதற்குக் காலாய் நின்ற
பண்பாட்டின் கூர்மையினைக் கூசி நீப்பார்.
தலைமை பெறின் சரிநீதி, முன்னில் லாத
தண்மை இனிக் கனியும் என உணர மாட்டார்!

ஓய்வினிமேல், தாராள மாய்க் கிடைத்தால்,
உண்மை - பொய்கள் ஆராய நேரம் வாய்க்கும்;
வாய்மை நெறி வென்றி பெறல் மட்டும் அன்றி,
மானிதமும் உயிர்ப்படைந்து வாழல் கூடும்.

தீமைகளைத் தயங்காமற் செய்வ தற்கும்,
திருடுதற்கும் இடம் கொடுக்கா நிலைமை தோன்றில்,
பூமியிலே முன்னிருந்த எதையும் விஞ்சும்
பொற்காலம் புதிதாகப் பூத்தல் கூடும்.

பொற்காலம் முன்னர் பல நிகழ்ந்த துண்டே,
புலவர்களின் கனவாயும் போன துண்டு.
கற்காமல் இருந்தபடி இருப்ப தாலும்
கைகட்டி, வாய்பொத்தி நிற்ப தாலும்,
தற்காலம் தேக்கமுறும்; தேக்கம் நீக்கின்,
தடை கடப்பின் - பொற்காலம் சமைதல் கூடும்,
நிற்காமல் ஓடுகிற காலத் தேரை
நிறுத்திட நினைப்பவர்கள் வெட்கிப் போக!

— முருகையன்

## யாரைக் கேட்பது ?

மரத்தின் கீழ், அனேகருக்கு முன்னாலிருந்த கைரேகை சாத்திரக் காரன் கரகரத்த குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்.

"ஒவ்வொருவனுடைய கைரேகையும் அவனது முழு வாழ்க்கையையும் கூறுகின்றது. ஒருவனுடைய மரணம் கூட எப்பொழுது சம்பவிக்கின்றது எனக் கைரேகையால் அறியலாம். அதனால் எல்லோருக்கும் ஒரே விதமான கைரேகை இருக்கமுடியாது" அவர் கூறி முடித்ததும் கூட்டத்திலிருந்து ஒரு சிறுவன் கேட்டான்.

"ஐயா, அமெரிக்கா யப்பானில் குண்டு போட்டது தெரியுமா ?"

"தெரியுமா, அதில் கோடிக்கணக்கான மக்கள் இறந்தார்களே..."

சாத்திரக்காரன் கூறிவிட்டு அமைதியானான். சிறுவன் முகத்தில் சிரிப்புடன் கேட்டான்.

"அப்படியானால் அவ்வளவு மக்களுக்கும் ஒரே கை ரேகையா ?"

சாத்திரக்காரன் முழிக்கத் தொடங்கிவிட்டு, பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு சொன்னான்.

"அது அமெரிக்காவைத்தான் கேட்கவேண்டும் !"

எதிர்பாருங்கள்

எஸ். ரி. நாகலிங்கம்ஸ்
லக்சுமி சேலைகளை

உள்ளூர் குழித்தறிச் சேலை
வேட்டி
சால்வை

முதலியவற்றிற்கும்
உங்களுக்குத் தேவையான
நெசவுக்குரிய நூல் வகைகள்
நெசவுக்குரிய உபகரணங்கள்
யாவற்றிற்கும்

எங்கள் ஸ்தாபனத்திற்கு விஜயம் செய்யுங்கள்.

கிறே நூல் கலர் பண்ணுவதற்கு இருத்தலுக்கு 2/50 ரூபாவும் நூலும் கொடுத்தால் வேண்டிய கலர் நூல் உடன பெற்றுக்கொள்ளலாம்.

எஸ். ரி. நாகலிங்கம் அன் கோ.

கந்தரோடை றோட், ... சுன்னாகம்.

## வசந்தம் விற்பனையாளர்களுக்கு

'வசந்தம்' பத்திரிகைக்கு வரவேண்டிய பணம் யாவற்றையும் விற்பனையாளர்கள் இம் மாத முடிவுக்குள் அனுப்பிவிட வேண்டும். மூன்று மாதத்துக்குத் தொடர்ந்து பணம் அனுப்பாத எந்த விற்பனையாளர்களுக்கும் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. காசோலைகள், பணச் சீட்டுகள், முத்திரைகள், மற்றும் நிர்வாகம் சம்பந்தமான தொடர்புகளில் நிர்வாகி வசந்தம் எனக் குறிப்பிட்டுத் தொடர்புகொள்க.

முதலாம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

நிர்வாகி.

A.J.

பிரதம தபாற் கந்தோரில் பதிவு செய்யப்பட்டது. பதிவு இல: QB59/300

**வசந்தம்** தனது வாசகர்களுக்கு விரைவில் புதிய நாவல் ஒன்றைத் தர இருக்கிறது.

★

ஈழத்துப் பிரபல நாவலாசிரியர்

## இளங்கீரன்

அவர்களின் புதிய படைப்பு

# "நாளை நம்முடையது"

புதிய தொடர்நாவல்

**விரைவில் ஆரம்பமாகிறது!**

★

உடன் சந்தாதாரர்களாகுங்கள்

ஆண்டுச் சந்தா ரூபா 5 (மலர்களுட்பட)

தனிப்பிரதி — 35 சதம்

இப்பத்திரிகை ஆரியர் வீதி, கொழும்புத்துறையில் வசிக்கும் திரு. இ. செ. கந்தசாமி அவர்களால், யாழ். ஸ்ரீ பார்வதி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.